விலை சதம் 70

பக்கங்கள் – 10

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
சுவை குன்றாமல்
உடனுக்குடன் அரைத்த
கோப்பியை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

வியாபாரிகளுக்கு
விசேஷ பரிசு
மில்க்வைற் நீலசோப் 72 கட்டி சுற்றிவரும் ருப்பர் தாள் 50 அல்லது 36 நீல சோப் சுற்றிவரும் ருப்பர் தாள் 100 அல்லது மில்க்வைற் அரைக் கட்டி சுற்றி வரும் பைகள் 50 அனுப்பி அழகிய துவாய் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 கார்த்திகை 1 ஜுல்ஹஜ் 7 ஞாயிற்றுக்கிழமை (16—11—80) இதழ் 277

# "பட்டினி ஒழிந்தாலே அபிவிருத்தி"

## புள்ளி விபரத்தை விவாதிப்பதால் பயன் ஏற்படமாட்டாது

### பாராளுமன்றத்தில் மானிப்பாய் எம். பி

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்திலுள்ள புள்ளி விபரங்களை விவாதிப்பதில் பயனில்லை: மக்களின் வாழ்க்கைத்தரம் தான் முக்கியம். வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் புள்ளிகளைத் தாக்கல்செய்வதால் எதுவிதப் பயனும் ஏற்படமாட்டாது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று முன்தினம் உரை நிகழ்த்துகையில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்தில் கூறினார்.

வேலைநிறுத்தம் செய்த ஊழியர்களைப் பொலிசார் தாக்கியது போதாதென்று வேலையை விட்டும் துரத்திவிட்டீர்கள் எனக் கூறிய திரு. தர்மலிங்கம், வாழ்க்கைப் புள்ளி ஒவ்வொன்றுக்கும் 2 ரூபா விதம் பார்த்தாலும் குறைந்தது 105 ரூபா சம்பளஉயர்வு கொடுக்க வேண்டும். ஆனால் நீங்கள் 70 ரூபா தான் சம்பள உயர்வு வழங்கியுள்ளீர்கள். அமெரிக்காவிலும், மாஸ்கோவிலும் உள்ள ஊழியர் வருமான விபரங்களை இங்கு சுட்டிக்காட்டுவதில் அர்த்தமில்லை. பொருட்கள் தாராளமாகக் கடைகளில் குவிந்து கிடக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவைகளை வசதியில்லாதவர்களும் வாங்க விரும்புகிறார்கள். அதனால் லஞ்சமும் ஊழலும் அதிகரிக்கின்றது. இதற்கு அரசாங்கமும் உடந்தையாகவிருக்கின்றது. பட்டாளத்தில் பட்டினி இருக்கக்கூடாது. நெப்போலியன் ரஷ்யாவில் தோற்றதற்கு குளிர் மாத்திரம் காரணமல்ல, பட்டினியும் ஒரு காரணம். எனவே மக்கள் பட்டினியாய்க் கிடக்கும்போது அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது என்று திரு. தர்மலிங்கம் கூறினார். (ம)

## திருமலையில் அடிகளாரைக் கௌரவிக்க நகரசபை முடிவு

(திருகோணமலை)

உலகில் தமிழினத்தின் பெருமையையும், தமிழ்மொழியின் தொன்மையும் எடுத்துக் கூறியதுடன் மட்டுமல்லாது மேற்படி நாட்டவரையே தமிழாராச்சியில் ஈடுபாடு கொண்டு உழைக்கத் தூண்டி 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனப் பாரதி கண்ட கனவை நனவாக்கிய தமிழ் முனி தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்குத் திருக்கோணமலை நகராட்சி மன்றம் தகுந்த இடமளித்து கௌரவிக்க இருக்கின்றது.

சிறப்பாக அடிகளாரின் தமிழ், ஆங்கிலப் படைப்புகளை பொதுநூலகத்தில் இடம்

(10-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் சுவாமி பிரணவானந்தாஜீ



(யாழ்ப்பாணம்)

மலேசிய திவ்விய ஜீவன சங்கத் தலைவர் சுவாமி பிரணவானந்தாஜீ யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

அண்மையில் இந்தியா வழியாகக் கொழும்புக்கு வந்த சுவாமிகள் தற்பொழுது அளவெட்டியில் தங்கியுள்ளார்.

பூர்வாச்சிரமத்தில் அளவெட்டியைச் சேர்ந்தவரும் பொன்னையா என நாமங் கொண்டவருமான சுவாமிகள் மலேசியா திரும்புவதற்கு முன் மேலும் சில தினங்களை அளவெட்டியில் கழிப்பார் என்று தெரிகின்றது.

1964-ம் ஆண்டு பூரண சந்நியாசியாக துறவறம் பூண்ட சுவாமிகள் உலக நாடுகள் பலவற்றுக்கும் விஜயம் செய்து குருதேவர் சுவாமி சிவானந்தரின் ஆத்மீகச் செய்திகளைப் பரப்பியுள்ளார்.

# மாவட்டசபைத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸின் நிலை!

## பொதுச்சபையே தீர்மானிக்கும்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுவதா இல்லையா என்பதுபற்றி தீர்மானிக்கும் பொறுப்பு தமிழ்க் காங்கிரஸ் பொதுச்சபையிடம் விடப்பட்டுள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் மகாநாட்டில் இவ்விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டு பொதுச்சபையிடம் விடுவதென முடிவுசெய்யப்பட்டது.

மாவட்டசபை தேர்தல் பற்றிய விபரத்தை அரசு உத்தியோகபூர்வமாக வெளியிட்டதும் தமிழ்க்காங்கிரஸ்பொதுச் சபை கூடி முடிவுசெய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### சுதந்திரத்தை நிலைநாட்டுவதே லட்சியம்

"தமிழ்ப் பேசும் இனத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டுவதே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஒரே லட்சியம்" என்று சனிக்கிழமை காலை தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற அங்கத்தவர்கள் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகின்றது.

சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சியின் யாப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கட்சியில் அங்கத்தவராக இருக்கும் ஒருவர் வேறொரு கட்சியில் அங்கத்தவராக இருக்கக்கூடாது என்று புதிய யாப்பு கூறுகின்றது. அங்கத்தவர்கள் கட்சியின் கொள்கைக்கும் கட்டுப்பாட்டிற்கு மாறாக இயங்கினால் அங்கத்தவரை உடனடியாகக் கட்சியின் அங்கத்தவர் பதவியிலிருந்து தற்காலிக நீக்கஞ்செய்யும் உரிமை, பொதுச் செயலாளருக்கு வழங்கப்படுகிறது. பின் நீக்கப்பட்டவரின் பிரச்சினை செயற்குழுவில் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும்.

### இளைஞர் காங்கிரஸ்

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் பெயரை தமிழ் இளைஞர் காங்கிரஸ் என்றும் தமிழ்க்காங்கிரஸ் மாதர் முன்னணியை தமிழ் மகளிர் காங்கிரஸ் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது,

(10-ம்பக்கம் பார்க்க)

## இறுதிச்சடங்கில் கொல்வின்

(யாழ்ப்பாணம்)

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. கொல்வின் ஆர் டி. சில்வா நேற்று சுன்னாகத்தில் நடைபெற்ற அமரர் நாகலிங்கத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டார். (ரு)

ஹோம் பினான்ஸ்
லிமிட்.
82, கன்னாதிட்டி றேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

CANTABIA
INSTITUTE
1981 May / June வகுப்புகள் ஆரம்பமாகும் திகதிகள்
ICMA-A, B & P1 6-12-80
IAA - Part - 1 6-12-80
Part II, III & IV 13-12-80
Chartered (Prelim) 6-12-80
★ ஆரம்ப மாணவர்களுக்கு ஏற்ற பயிற்சி
★ இலவச அச்சடித்த குறிப்புகள்
★ இலவச அச்சடித்த கேள்விகளும் பதில்களும்
Panel of Lecturers Includes
Ms M. நலந்துவன்,
S. W. கனகரட்னம்,
P. சிவபாதசுந்தரன், K. நாதன்.
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
7369

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் அம்மா



வழமைபோல் அன்று காலையும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த அம்மாவைப் பார்ப்பதற்காகச் சென்றேன். வார்ட் வாசலை அண்மித்தபோது இரத்தமே உறைவதுபோல் இருந்தது.

அம்மாவின் கட்டிலுக்கு ஒரு புறத்தில் பிராணவாயு கொண்ட இரும்புப்போத்தல் வைக்கப்பட்டு மறுபுறத்தல் இருந்த 'ஸ்டாண்ட்' ஒன்றில் குளுக்கோஸ் போத்தலும் தூங்கியபடி இருந்தது.

எனது தெய்வம் பேச்சுமூச்சற்று அரவுநினைவற்ற நிலையில் கிடக்கிறது.

முதல்நாள் மாலை ஆறுமணிக்கு ஆஸ்பத்திரியிலிருந்து நான் வீட்டுக்குப் போனபோது தன்னையும் கூட்டிச் செல்லுமாறு என்னைக்கெஞ்சிக்கேட்ட எனது அம்மாவின் முகமே எனது கண்ணீர் அலைகளுக்கு மத்தியில் தெரிகிறது எண்ணங்கள் நினைவை நெருடுகின்றன.

அம்மா முதல்நாள் இரவு திடீரென சுயநினைவு இழந்தார் என்றும் நள்ளிரவுநேரம் டாக்டர் அழைக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டார் என்றும் அங்கு கண்ணீருடன் நின்ற அக்காவிடம் கேட்டறிந்ததும் டாக்டரிடம் ஓடுகிறேன்.

பெரிய டாக்டர் வந்ததும் விபரமாகக் கூறுகிறேம் 'பயப்படத்தேவையில்லை. இந்நிலையில் இருந்த சில நோயாளிகளும் வருத்தம் மாறி வீடு சென்றிருக்கிறார்கள்' என்று அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டாக்டர் கூறுகிறார்.

மனம் ஓரளவு ஆறுதல் அடைகிறது. டாக்டர் கூறிய அந்தச் சில நோயாளிகளைப் போன்று எனது அம்மாவும் குணமாகி வீடு திரும்புவ என்றே எண்ணியிருந்தேன்.

சிறிதுநேரத்தில் அம்மாவை பார்வைவட்ட பெரிய டாக்டர் 24 மணித்தியாலத்திற்குள் நினைவு வராவிடின் நிலைமை மோசமாகும் என்று கூறிவிட்டார், அனுபவமின்மையோ, சிறுபிள்ளைத்தனமோ தெரியாது, அம்மாவின் உயிருக்கு ஆபத்து வரும் என்று எனது மனம் எண்ணமறுத்தது.

ஓராண்டு காலமாக நோயுற்றிருந்தபோதிலும் அம்மா என்றும் படுக்கையில் படுத்ததில்லை. கடந்த மாதம் 9-ம் திகதி வியாழக்கிழமை காலை இரவு வேலை முடிந்து வீட்டுக்குப் போனபோது அம்மாவினால் நன்றாகக் கதைக்க முடியவில்லை. தட்டுத்தடுமாறி வார்த்தைகள் வெளி வந்தன. முன்போல் அவவால் நடக்க முடியவில்லை.

அந்நிலையில் கண்ணீர் சிந்துவதைத்தவிர என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை.

உடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். அன்றும் மறுநாளும் சுகமாகவே இருந்தார். ஓரளவு குணமடைந்திருந்தா என்று கூடக் கூறலாம்.

ஆஸ்பத்திரிக்குச் சென்ற மறுநாள் மாலை என்னைத்தனது கட்டிலின் அருகே அழைத்து "தம்பி என்னை வீட்டுக்குக் கூட்டிப்போ; வீட்டில் என்றால் நான் எனது விருப்பம் போல் படுத்திருப்பேன். 'ஆஸ்பத்திரியில் படுத்த நான் தற்செயலாக சத்தம் போட்டா அது உங்களுக்கும் வெட்கம், எனக்கும் வெட்கம்" என்று சொன்ன.

இதுவே எனது அம்மா என்னிடம் கூறிய கடைசி வார்த்தைகள்.

நானும் அம்மாவை ஏமாற்றுவதற்காக "சரி கார்பிடித்து வந்து உங்களைக் கூட்டிப் போகிறேன்" என்க் கூறிவிட்டு வந்தேன்.

இரவு ஆஸ்பத்திரியில் தங்கி நின்ற அக்காவிடம் "தம்பி எங்கே? நான் வீட்டை போக வேண்டும்" என்று கேட்டிருக்கிறா. அவவும் "தம்பி கார் பிடிக்கப் போய்விட்டார்" என்று கூறியிருக்கிறார்.

அம்மா ஆஸ்பத்திரியிலிருந்தே ஒரு வாரம் பேச்சு மூச்சற்றுக் கிடந்துவிட்டு, அண்ணா, அக்கா, சின்னக்கா, ஐயா எல்லோரையும் ஏமாற்றிவிட்டு இந்த உலகத்தை விட்டே போய்விட்டா.

முதலில் டாக்டர் எமக்குத் தந்த 24 மணி நேரக் காலக்கெடு முடிவடைந்து, மேலும் ஒரு வாரம் சுயநினைவின்றிக் கிடந்த அன்னை, அடுத்த வெள்ளிக்கிழமை இரவு மீண்டும் இவ்வுலக நினைவு திரும்பாமலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

ஒரு தாய்—

நமது இதயத்தின் இன்னல்களையெல்லாம் தன்னுடைய தாக்கி, நமது வேதனைகளையும், சோதனைகளையும் தன்னுடைய இதயத்தில் நிரப்பி, எமக்கு வாழ்வளிப்பவள், நிம்மதியை நெஞ்சில், நெஞ்சால் நிரப்புபவள். பாசம்-பரிவு-அன்பு-விசுவாசம்-அமைதி-அடக்கம் அத்தனையினதும் மொத்த வடிவம் தான் அவள்.

அப்படியொரு தாய் எனக்கு இனிமேல் இல்லை. எனது அன்புத் தெய்வம் சிவபதமடைந்து இன்று 31வது நாள்.

— கன்டோஸ்

# இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் இன்று ஞாயிற்றுக்கிழமை கம்பன் விழாக் கொண்டாடுகிறது.

இன்று மாலை நல்லை ஆதீனத்தில் பேராசிரியர், செந்தமிழ்க்கவிமணி சி. இ. சதாசிவம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆசிரியர் வித்துவான் சி. ஆறுமுகம் கௌரவிக்கப்படவுள்ளார்.

"கம்பனின் கவித்திறன் கண்டனம்" என்ற தலைப்பில் கவிதையரங்கும் 'திருக்கேதீச்சரநாதர் வண்டு விடு தூது" நூல் ஆய்வரங்கும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (அ)


# வரி விளம்பரம்

## தேவை

நல்ல அனுபவமுள்ள டாக்டர் ஒருவர் தேவை. (ஆங்கில வைத்தியமும் செய்யக் கூடியவர்கள்) உடன் விண்ணப்பிக்கவும். முடிவுத் திகதி: 21-11-80 விளம்பர இல: 7343, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7343

35. M. M. கமரா விற்பனைக்கு இருந்தால் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் போட்டோ இலங்கேஸ், 42, பலாலிவீதி, யாழ்ப்பாணம். 7358

## விற்பனைக்கு

D. L. லம்பிறற்றா இத்தாலி ஸ்கூட்டர் 6 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: பாலா ஸ்கூட்டர் வேக்ஸ், 140, நாச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம். 7342

G. C. E. (O/L) 1980 புதிய கணிதத்தில் விசேட திறனமைத்தி. பரீட்சைக்கு முன்னர் பயிலவேண்டிய நூல். கணிதம் - மாதிரி வினாத்தாள்களும் விடைகளும். ஆசிரியர்: திருமதி இராஜநாயகம் B. A. (Lond) ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். 7312

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 151, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 7341

நல்ல நிலையில் றிகொண்டிசன் செய்யப்பட்ட CD 125 ஹொண்டா மோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு. C. விஜயநாதன், 156/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 7365

மினி பஸ் சிவிலியன் 75—76 மொடல் 26 ஆசனங்கள் உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. வாகனமாற்றம் செய்யவிரும்பின்செய்துகொள்ளலாம். மொடேண் பேணிச்சர், 79/2, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 7364. (7364)

எமது ஸ்தாபனத்தின் மாட்டுத்தொழுவத்தில் எருக்குவியல் விற்பனைக்குண்டு. விலையைப் பார்வையிட்டு தீர்மானித்துக்கொள்ளலாம். ஸ்ரீ தாமோதர விலாஸ், 239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 7065. (7367)

7 SRI 9171 பல்கன் விற்பனைக்குண்டு. காருக்கும் மாற்ற விருப்பம். வே. க. சிவசுப்பிரமணியம், லங்கா பாதுகாப்புச்சேவை அதிகாரி, 11 A. வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். 736-

நல்ல நிலையில் உள்ள தனிப் பாவிப்பில் இருக்கும் 6 ஸ்ரீ இரண்டாயிரம் தொடரிலக்கம் உள்ள ஒஸ்ரின் கேம்பிறிச் (AUSTIN CAMBRIDGE) விற்பனைக்கு உண்டு. கீழ்க் காணும்முகவரியில் பி. ப. 3-00 மணிக்குப் பின் பார்வையிடலாம். J. G. வாணர், 27, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம், 7371


# நெடுங்கேணியில் கந்தஷஷ்டி விழா

(புளியங்குளம்)

நெடுங்கேணி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் ஸ்கந்த ...

# சாவகச்சேரிப் பகுதியில் முஸ்லிம் பதிவாளர் தேவை

## எம். பி. கோரிக்கை

(மட்டுவில்)

சாவகச்சேரிப் பகுதியில் வாழும் முஸ்லீம் மக்களுக்கான ஒரு முஸ்லீம் விவாக, பிறப்பு இறப்புப் பதிவாளர் நியமிக்கப்படவேண்டும்

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பதிவாளர் நாயகத்திற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். சாவகச்சேரி நகரசபையும் இது பற்றி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் தனது கடிதத்தில் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சாவகச்சேரித் தொகுதியிலும், சுற்றியுள்ள இடங்களிலும் சுமார் 500 க்கும் அதிகமான முஸ்லீம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்களின் விவாக, பிறப்பு, இறப்புப் பதிவுகள் செய்வதற்கு ஒரு முஸ்லீம் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சிங்கள மக்களிடம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

களே வல்ல. அவர்களுக்கு மக்களே தொண்டுபுரியக் கடைப்பாட்டுள்ளனர். அவர்கள் லௌகிக வாழ்க்கையைத் துறந்தவர்கள். அவ்வளவுதான்.

ஆகவேதான் மிகப் புராதன காலந்தொட்டே சிங்கள மக்கள் மனிதனுக்குச் சடங்குகளிலும் கொண்டாட்டங்களிலும் இயற்கையாகவே அமைந்திருக்கும் வேட்கையை இந்துசமயத்தில் காணப்படும் சடங்குகள் கொண்டாட்டங்களை அனுட்டித்துத் தணித்துக் கொண்டார்கள். இதயத்திலும் சமயத்திலும் அவர்கள் தீவிர பௌத்தர்களாக இருந்தமையால் அவற்றை ஏதோவொரு வகையில் பௌத்த மதத்தோடு சம்பந்தப்படுத்தி விட்டார்கள்.

இறுதியாக தமிழர்களுடைய புத்தாண்டும் சிங்களவர்களுடைய புத்தாண்டும் ஒன்றாக இருப்பது நாம் இதுவரை கூறியவை யாவற்றிற்கும் பகுடமாக அமைகிறது. இதோடு பிணைக்கப்பட்ட சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஒன்றாக இருப்பதையும் கவனித்தல் வேண்டும். உலகில் வேறெங்கணும் புத்தாண்டுத் தினம் இந்நாளில் ஆரம்பிப்பதில்லை. ஆகவே இவ்விரு சாதியினருடைய பழக்கவழக்கங்களிலும் சம்பிரதாயங்களிலும் எவ்வளவு ஒற்றுமை இருக்கிறதென்பதை நாம் என்றுமே மறந்துவிட முடியாது; மறந்துவிடவும் கூடாது.

# வெற்றிப்பாதையில் குடும்பத்திட்டம்

(மன்னார்)

'பொதுமக்கள் இப்போதெல்லாம் வெட்கத்தைவிட்டு குடும்பநலத்திட்டத்தை பற்றி வெளிப்படையாகக் கதைத்து கடைப்பிடித்துவருகிறார்கள். இது பாராட்டக்கூடியதாகும். எமது பொருளாதாரத்தைக் கட்டிக்காக்க குடும்பநலத் திட்டத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.'

இவ்வாறு செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் திரு. சே. கணேஷ் குடும்பநலத் திட்ட விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது கூறினார்.

செட்டிகுளத்தில் நடைபெற்ற இவ்விழாவில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டி என்பவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டது. (அ)


# "சோவியத் நாடு"

பொருளாதார, விஞ்ஞான, கலாசார, கல்வி உட்பட சோவியத் வாழ்க்கையின் அனைத்துத்துறைகளையும் அழகு படங்களுடன் சித்தரிக்கும் கட்டுரைகளுடன் மாதாந்தம் வெளியாகும்

"சோவியத் நாடு" சஞ்சிகையையும்

சோவியத் நாட்டில் சோஷலிஸ நிர்மாண அநுபவங்களை விளக்கும் உயர்ரக கட்டுரைகளைத் தாங்கி வெளியாகும்

"சோஷலிஸம்-தத்துவமும் நடைமுறையும்"

மாசிகையையும் தவறாது வாசியுங்கள்

மேற்கண்ட இரு சஞ்சிகைகளையும் பெற ரூபா 15/- செலுத்தி 1981-ம் ஆண்டுக்கான சந்தாதாராகுபவர்க்கு வெளிநாட்டில் அச்சிடப்பட்ட பலவர்ணப்படங்களுடன் கூடிய கலண்டர் பரிசாக வழங்கப்படும். இந்த நாட்காட்டி தபாலில் அனுப்பப்படமாட்டாது. இவ்வருடம் டிசம்பர் 24-ந் திகதிவரை வார நாட்களில் பிற்பகல் 3 லிருந்து 5-30 வரை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வந்து இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

"சோவியத் நாடு"
சோவியத் கலாச்சார இல்லம்,
131, டபிள்யூ, ஏ. டி. ராமநாயக்க மாவத்த,
கொழும்பு — 2.

7357



# பதவி வெற்றிடம்

நாவற்குழி, பருத்தித்துறை கட்டிட வேலைத்தலங்களில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கட்டிட மேற்பார்வையாளர்
2. மேற்பார்வைப் பயிற்சியாளர்
3. ஓய்வுபெற்ற / அநுபவம் வாய்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர்

முகவரி

**The Hydraulic Engineering Co. Ltd.**

584, காலி வீதி, கொழும்பு-3.

7353



# விசேட அறிவித்தல்

எமது வர்த்தக ஸ்தாபனமும், போக்குவரத்துச் சேவையும் (SAIFFEE TRANSPORT SERVICE) முஹரம் தொழுகைக்காக நாளை (17-11-80) திங்கட்கிழமை முழுநாளும் வியாபாரத்திற்காக மூடியிருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

முகமதலி அப்துலலி
5, 7 - பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லுருவிகள் உள்ளவரை....!

**— சகுந்தலா தம்புசாமி —**

**"இறந்த காலத்தை இனிமையாகவும் நிகழ் காலத்தை நிச்சயமற்றதாகவும் எதிர்காலத்தை ஏக்கம் நிறைந்ததாகவும் நினைத்து வந்தவர்கள் ஓர் ஆயுதமற்ற புரட்சியினால் ஆயுள் பூராவும் மறுமலர்ச்சி பெற்றவர்களாக அந்த ஏழைகள் ஆகிக் கொண்டிருந்தனர்..."**



பூரண நிலவு வானில் பவனி வந்து கொண்டிருந்தது. அதன் தண்ணொளி பரப்பும் எழில் முகத்தைக் காணப் பொறுத மேகங்கள் அதனை மறைத்து மறைத்து படர்ந்து மிதந்து சென்றன. அவற்றால் எவ்வளவு தூரம் தான், எத்தனை நேரம்தான் மதியை மறைக்க இயலும்? நிமிடத்திற்கொருதரம் தன்னை முழுதாக வெளிப்படுத்திக்கொண்டிருந்தாள் நிலவு மங்கை.

பலவாறாகப் பாய்ந்து ஓடிய மனக்குதிரைக்குக் கடிவாளமிடாமல் வானையே வெறித்து நோக்கினாள் அகல்யா. அவள் சிறுவயதிலிருந்தே அப்படித்தான்; எதனையும் ரசனைக் கண்ணோடு, பல்வேறுகோணங்களில் நோக்குவாள். அவளுக்கு நிலவு என்றால் அலாதிப் பிரியம். இந்த நிலவுக் கன்னி தான் எவ்வளவு கொடுத்து வைத்தவள். தான் நீந்தி விளையாட எல்லையில்லா வானக் கடலையே சுவீகரித்துவிட்டாளே! இத்தனை அழகும் பொலிவும் பெற்றுக் காண்போர் கவரும் கட்டழகியாக, கவிஞரது கற்பனையிற் களிநடம் புரியும் கதாநாயகியாக..... எல்லாவற்றிற்கும் மேலாக இயற்கைத் தாயின் அழகான குழந்தையாக.....! ம்..... இவளைப்பற்றி வர்ணித்துக் கொண்டே போகலாம்.

அகல்யாவிற்கு ஒரு விபரீத ஆசை உண்டு என்றுவது ஒருநாள் வெண்பஞ்சுப் பொதி போன்ற மேகத் திரள்களினிடையே ஏறி மெல்ல நடந்து சென்று திங்களைக் கரங்களால் ஸ்பரிசித்துப்பார்க்க வேண்டுமென ஓர் ஆவல்! பரிகாசமாகத் தோன்றினாலும் இயற்கையை ரசிக்கத் தெரிந்த, ரசனையுள்ளம் கொண்டவர்களுக்குத்தான் இந்த ஆசையின் தாற்பரியம் நன்கு புரியும்.

நிலவு மெல்ல மெல்ல நடுவானின் உச்சியை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது. தன்னிலைக்கு வந்தவளான அகல்யா சாய்ந்து அமர்ந்திருந்த கதிரையை விட்டு எழுந்து அதனை மடித்து மெல்லக் கரங்களில் தூக்கியவாறே அந்தப் புல்வெளியை விட்டு அருகேயமைந்திருந்த தன் வீட்டை நோக்கி நடந்தாள். அகல்யாவின் உலகமே அலாதியானது. எந்நேரமும் கற்பனையில் மானசீகமாக இலட்சிய உலகை அமைத்து அதில் ஆழ்ந்து போவது அவள் வழக்கம். அவள் வசதியோடு வாழ்ந்தும் தன்போன்றோர் வேடிக்கை பார்ப்பதற்காகக் கீழே தள்ளப்பட்ட ஒரு சில ஜீவன்களை அனுதாபத்தோடு, ஆதரவோடு, உள்ளூர வேதனையோடு பார்த்துப் பழக்கப்பட்டவள்.

பரந்த மனப்பான்மையும், இலக்கிய உணர்வும் தான் அவளை எழுத்துத் துறைநோக்கித் தள்ளிவிட்ட பிரதான கருவிகள். வீட்டிலும் அவள் இது பற்றித் தர்க்கிப்பது வழக்கம். அவள் வீட்டார் ஆசார சீலர்கள். கீழ்ஜாதி — மேல்ஜாதி என்ற பாகுபாட்டில் விசேஷ அக்கறை கொண்டவர்கள். இத்தகைய மனப்பான்மை கொண்ட ஒரு குடும்பத்தில் அகல்யா தோன்றியது ஆச்சரியமே! அகிம்சாவாதிகளில் ஒருவரான ஞானி போதிசத்துவர் கூட மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் கொண்ட இடத்தில்தானே உதித்தார்! எவரும் வளர்வதில், வளர்க்கப்படுவதில் தானே உருவாக்கப்படுகிறார்கள். பிறப்பின் நிமித்தம் எவரும் உருவாவதில்லையே? இதற்கு உதாரணமாக அகல்யாவைக் கொள்ளலாம்.

ஆசிரியையான அவள் அன்று காலை கல்லூரிக்குப் புறப்பட்டுச் சென்ற போது அவள் ஆசிரியைத் தோழி அபிராமியை எதிர்பாராத விதமாக வழியிலேயே சந்திக்க நேர்ந்தது. இருவரும் இணைபிரியா "நண்பி"கள் இருவரது மனநிலையும் ஒரே மாதிரி! நோக்கமும் ஒன்றே. அபிராமி சமூகப்பொதுக் கூட்டங்களில் பேசி அனுபவம் உள்ளவள். அகல்யா போன்றே ஜனரஞ்சகமாகக் கதைகளை எழுதுவதில் வல்லவள். அதுமட்டுமன்று! அவள் பேச்சில், கம்பீரமான தோற்றத்தில் கூட ஆக்ரோஷம் மிக்க அவள் கருத்துக்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். மொத்தத்தில் தோழிகள் இருவரும் பாரதியாரின் "ஒருவனுக்கு உணவில்லையேல்......" என்ற கருத்தில் ஆழமாக ஊறிப் போனவர்களே!

அன்று அபிராமி ஒரு புதிய செய்தியை அகல்யாவிடம்கூறினாள். "உமக்குத் தெரியுமா? ஒரு விஷயம்! நாங்கள் சும்மா பிள்ளைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் போதித்து பிரயோசனமில்லை. ஒரு விதத்தில் இவையெல்லாம். வெறும் வேஷம் என்று கூடக் கூறலாம். உண்மையாக சேவை செய்யத் தகுந்த இடம் கண்டு பிடித்துவிட்டேன். உமக்குத் தெரியும்தானே! இரண்டாம் குறுக்குத்தெரு ஆரம்பிக்கும் சந்தியிலிருந்து நேராகப் பார்த்தால் அகலமான சாக்கடைக்கு அப்பால் பள்ளத்தில் ஓர் குடிசைப்பகுதி தெரியுமே! அங்கே தான் நாங்கள் போகவேண்டும். நான் "சமூகத் தொடர்புகள் நிலையத்"தோடு கதைத்துவிட்டேன். அவர்களும் எம்மை ஊக்கப்படுத்துகிறார்கள். நீரும் வருவீர் தானே!"

"இந்த ஞாயிறு காலை சமூகத்தொடர்புநிலையத்திலிருந்து சில ஆட்களை நம் வீட்டிற்கு அனுப்புவார்களாம்! நாங்கள் போய் சேரியிலுள்ள குடும்பப் பெண்களோடு கதைத்து அவர்களது பிரச்சனைகளைக் கேட்டறிய வேண்டும். பொருளாதார, சுகாதார சம்பந்தமாக அவர்களுக்கு விரிவான ஆலோசனை வழங்கி சீரான வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும். வருமானம் குறைந்த பெண்களுக்கு கைத்தொழில்களைக் கற்பிக்க வேண்டும். இதற்குத் தேவையான பொருட்களை நிலையம் வழங்கும். பெண்கள் உருவாக்கிய பொருட்களை விற்பதன் மூலம் உபரிவருமானம் பெறலாம். இந்த முயற்சியை மேற்கொள்வதன் மூலம் சிக்குப்பிடித்த பரட்டைத் தலையோடு, மக்குகளாக நாலு சுவர்களுள் அடைபட்டு குழந்தைகளை வாய்க்கு வந்தபடி நாயே, பேயே, கடன்காரா என்று திட்டித் தீர்த்துந் தங்கள் இயலாமையையும், ஆற்றாமையையும், பலவீனங்களையும் வெளிப்படுத்த வாய் வார்த்தைகளை வடிகால்களாகப் பிரயோகிக்கும் அவர்களின் நிலை மாறும். அருவருக்கத் தக்க ஜீவன்களாகச் சமுதாயத்தில் சிறிதும் ஒட்டாத ஒரு வர்க்கமாக வாழும் சேரி மக்கள் முன்னேற்றம் பெறமுடியும். இல்லையேல் காலங்காலமாகச் சமுதாயத்தில் இவர்கள் ஒரு 'றெட் மார்க்' தான்."

மூச்சு விடாமல் உணர்ச்சி வேகத்தோடு பேசி முடித்தாள் அபிராமி. அவள் பேசப்பேச அகல்யாவின் உடலிற்குள் ஒரு புதிய சக்தி புகுந்து மயிர்க்கால்களைச் சில்லிடவைத்து, உத்வேகத்தைக் கொடுத்த வண்ணமிருந்தது.

அவர்கள் எதிர்பார்த்திருந்த அந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. தான் போகும் இடம் பற்றி வீட்டாரிடம் மூச்சுக் காட்டவில்லை. அபிராமியோடு சமூக ஸ்தாபனமொன்றுக்குப் போவதாகத் தாயிடம் கூறினாள். ஒன்பது மணியளவில் கார் வாசலில் வந்துநின்றது. உள்ளே அகல்யாவும், வேறு பெண்மணிகளும் இருந்தனர். அவர்கள் சமூகத் தொடர்பு நிலையத்தைச் சேர்ந்தவர்கள். சேரிப்புறத்தை நோக்கிக் கார் சென்றது. எல்லோரும் இறங்கினார்கள். சேரியை அடைவதற்குப் பிரதான பாதையின் அருகே அமைந்திருக்கும் அகலமான சாக்கடையைக் கடக்க வேண்டும். சாக்கடையின் இரு தடித்த சுவர்களுக்கு அப்பால் நீளமான பள்ளம். அதில்தான் நெருக்கமான குடிசைகள் காணப்பட்டன. சாக்கடையைக் கடப்பதற்கு மெல்லிய [illegible] மட்டைகளாலான தட்டியொன்று போடப்பட்டிருந்தது. மிகவும் குறுகலானது. ஒருவர் பின் ஒருவராகவே நடக்கவேண்டும். இருபுறமும் கரைபுரண்டோடும் சாக்கடை நீரின் துர்நாற்றம்: நடுவே விழுந்துவிடுவோமோ என்ற பயத்தோடு கவனமாக நடந்தாள் அகல்யா.

எல்லோரும் சேர்ந்து சேரிப்புறம் நோக்கி நடந்தார்கள். எதிர் எதிராக நெருக்கமான குடிசைகள். இடையே குறுகலான இடைவெளி. அதற்குள் அசுத்த நீர் சிறு குட்டையாகத் தேங்கி நின்றது. அநேக குழந்தைகள் அதற்குள் அம்மணமாக விளையாடிக்கொண்டிருந்தன. இவர்களைக் கண்டதும் விழிகள் அகல நோக்கின. பின்பு தயங்கித்தயங்கி இவர்களைச் சமீபித்தனர்.

மூக்கில் வழிந்த சளியைத் துடைத்துவிட்டு, அந்தக் கையாலேயே அகல்யாவின் கைப்பையை லேசாகத் தொட்டு அழுத்திப் பார்த்தாள் ஒரு சிறுமி; பின்பு அதே கையாலேயே தலையைப் பரபரவென்று சொறிந்தாள். இவையெல்லாம் அகல்யாவிற்குப் புதிய காட்சிகள். அவளுக்கு வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருந்தது.

சமூகத் தொடர்பு நிலையப் பெண்மணிகள். "நீங்கள் இருவரும் இந்தப் பக்கத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள்; நாங்கள் சேரியின் அடிவாரத்திற்குச் செல்கிறோம்" என்று கூறிவிட்டுச் சேற்றுக் குவியல்களினிடையே சிரமப்பட்டு நடந்து சென்றனர்.

அகல்யாவும், அபிராமியும் ஒரு குடிலைச் சமீபித்தார்கள். அதன் வாயிலில் ஒரு பெண் நின்றிருந்தாள். இளைய வயது தான். ஆனால் முகத்தில் ஒரு கடுமை. பரட்டைத் தலையைப் பலமாக முடித்திருந்தாள். கண்கள் விசனத்தோடும், ஒரு வித உக்கிரத்தோடும் இவர்களை நோக்கின. வாய், வெற்றிலையைக் குதப்பிக்கொண்டிருந்தது. இடுப்பில் தூக்கிச் செருகிய கந்தல் சேலைக்கும் மேலாக மேடிட்டிருந்த அவள் வயிறு, குடும்ப அங்கத்தவர் ஒருவரது வருகைக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. அவளது சேலையைப் பிடித்துக் கொண்டு சிறிதும் பெரிதுமாய் நான்கு குழந்தைகள்; இடுப்பில் ஒரு நோஞ்சான் குழந்தை குஷாலாக அமர்ந்திருந்தது: அத்தோடு [illegible] ஏணையிலிருந்து ஒரு [illegible] வெளியே தெரிந்து, "என்னையும் கவனியுங்கள்'' என்று கூறுமற் கூறியது.

அபிராமி தாங்கள் வந்த நோக்கத்தை அப்பெண்ணிடம் கூறினாள். "உதெல்லாம் சரிப்படாது! ரெண்டு நாளைக்கு வருவீங்கள்: மூன்றும் நாள் இந்தச் சேற்றைத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டீர்கள். எங்கட பிரச்சனையைத் தீர்க்க முடியேல்ல! அதுக்கிடேல்ல உதுதான் இப்ப முக்கியமே! உங்களுக்கு வேற 'வேலையில்லையே.....'' சரமாரியாக வார்த்தைப் பிரயோகம் நடந்தது. அவள் அறியாமையைக் கண்டு ஆத்திரமடைந்தாள் அகல்யா.

"அம்மா! நாங்கள் சொல்கிறது உனக்கு விளங்கவில்லை. இத்தனை குழந்தைகளைப் பெற்றிருக்கிறாய். அதுகளுக்குச் சாப்பாடும், உடுப்பும் உன்னால் ஒழுங்காகக் கொடுக்க முடிகிறதா.....? ஆறு வயதுப் பெடியன் அறிவு வளர்ச்சியில்லாமல் சேற்றுக்குள் விளையாடுகிறான். இதையெல்லாம் கொஞ்சம் யோசித்துப் பார்; நாங்கள் உனக்கு நன்மையைத் தான் செய்ய வந்திருக்கிறோம். இதனால் உனக்கு வருமானமும் வரும். நிறைவாகக் குழந்தைகளை வளர்க்கலாம்.

அகல்யாவின் பேச்சு அந்தப் பெண்மணியின் நெஞ்சத்தைத் தொடத்தான் செய்தது; பிலாக்கணம் வைத்துத் தனது கஷ்டத்தைச் சொல்லி, ஒருகணம் அழுது தீர்த்தாள். இவர்கள் ஆறுதல் கூறினார்கள். இவ்விதம் ஒவ்வொரு குடிசையிலும் ஆணித்தரமான அறிவுரைகள்.....! வற்புறுத்தல்கள்.....! குடிசையில் சில முணுமுணுப்புகள் காணப்பட்டாலும், சேரியின் அடிவாரத்தில் ஒரு பெரிய கீற்றுக் கொட்டகை அமைக்கச் சம்மதித்தனர். ஒவ்வொரு ஞாயிறும் பெண்கள் சீக்கிரம் தமது கடமைகளை முடித்துவிட்டுக் காலை ஒன்பது மணிக்கு அங்கு செல்லவேண்டியது! 12 மணிக்குப் பயிற்சி முடியும். அங்கு வயர் கைப்பைகள் பின்னுவது, அழகிய தொப்பிகள், கூடைகள் செய்வது, சேலைகளுக்குச் சாயமூட்டுவது, சுகாதார ரீதியாக வாழ்க்கை நடத்துவது, குழந்தைப் பராமரிப்பு போன்ற அறிவியல் ரீதியான பயிற்சிகள் ஆரம்பிக்கத் திட்டம் போடப்பட்டது.

அகல்யாவிற்கு மனதில் ஒரு திருப்தியும், நிறைவும் உண்டாயிற்று! சமூகநலத் தொடர்பு நிலையம் தேவையான அடிப்படைப் பொருட்கள் அனைத்தையும் கொடுத்து உதவியது. நிலைய தொண்டர்களான சில பெண்மணிகள் ஏற்கெனவே அனுபவம் பெற்றிருந்தனர். எனவே அவர்கள் கைப்பணி வேலைகளைக் கற்றுக் கொடுக்கவும், அகல்யாபோன்றோர் அறிவியல் ரீதியான விளக்கங்கள், ஆலோசனைகள், புத்திமதிகள், கலையுணர்வோடு கைப்பணிப் பொருட்களுக்கு மெருகேற்றல்போன்ற தொண்டுகளைச் செய்வதென முடிவாயிற்று.

ஆனால் இவற்றிற்கெல்லாம் ஒரே பிரச்சனை குறுக்கே நின்றது. சேரியில் காணப்படும் குழந்தைகளின் தொகைகளுக்கு சமதையாகக் கட்டாக்காலி இளைஞர்களின் தொகையுமிருந்தது. அவர்களில் ஒரு சிலரே இவர்களது பணிகளைப் புரிந்துகொண்டார்கள். கீற்றுக்கொட்டகையிடச் சம்மதித்தார்கள். ஏனையோர் படு மோசம். இதுநாள்வரை பொதுக்கூட்டங்களுக்குக் கல்லெறியவும், சேரிக்கன்னிகளை கேலி செய்யவும், பிரதான பாதையாற் செல்லும் கௌரவமான பெண்களுக்கு மட்டரகமான வார்த்தைப் பிரயோகத்தோடு நையாண்டி பண்ணவுமே தெரிந்திருந்தனர்.

அதுமட்டுமல்ல, இவர்கள் சில அரசியற் கட்சிகளின் கைக்கூலி நோட்டீஸ் ஒட்டியும் வாழ்க, ஒழிக கோஷங்களை மாறி மாறிக் கோஷித்துக் கிடைப்பவற்றைக் கள்ளுக் கொட்டில்களுக்கு தாரைவார்ப்போராகக் காணப்பட்டனர். இதில் வேதனைப்படவேண்டிய விஷயம் என்னவென்றால் இத்தனைபேரும் பதினைன்குதொடக்கம் ஏறக்குறைய 28 வயதிற்கு இடைப்பட்டவர்கள். சமுதாயச் சிற்பிகள், குருத்துக்கள், அரும்புகள், வாரிசுகள் என்று மேடைக்கூட்டங்களில் முழங்குபவர்களுக்கு இவர்கள் அத்தனைபேரும் ஒரு சவால்,

இந்த இளைஞர்கள் எதையும் சிந்தித்துச் செயலாற்றத் தெரியாதவர்கள்.

"எவருக்குமே பணியக் கூடாது.....! எதையுமே எதிர்க்கவேண்டும்'' என்று அர்த்தமற்ற காட்டுமிராண்டிக் கொள்கையில் ஊறிப்போனவர்கள்: இவர்களது மனச்சாட்சி வழிப்படாத நாவிற்கு அகல்யா, அபிராமி, நிலையப் பெண்மணிகள் போன்றோர் விருந்தாகினர்.

"சேலைகட்டிய சிங்காரிகளுக்கு நம்ம சேரியில் என்ன வேலை..........?''

எங்கமண்ணில் கொட்டகை எழுப்புறார்களாம்! அது கொட்டுண்டுபோக எத்தனைநாள்.....?

இந்த மேனிமினுக்கிகளால் சேரியின் அமைதியே அழியறது...?''

இப்படிப் பலவாறான முணுமுணுப்புகள், சலிப்புகள் தொடர்ந்தன.

சேரியில் வெளியாட்கள் நடமாட்டம் அதிகரித்ததால் அவர்களாற் சுதந்திரமாக இருக்க முடியவில்லை யென்பது உண்மைதான்.

முன்போற் குடித்துவிட்டு ஆடை விலக உருள முடியவில்லை!

இதை அவர்களாற் தாள முடியவில்லை!

இவர்களது தொந்தரவால் அகல்யா அரண்டாள், சமூக நலத்துறையில் எதிர்ப்புகள் ஏராளம். காலப்போக்கில் அகன்றுவிடுமென நிலையப் பெண்மணிகள் தேறுதல் கூறியும் அவள் மனம் சமாதானப்படவில்லை. சமுதாயப் புல்லுருவிகள் உள்ளவரை தியாகிகளின் சமாதிகளும் அதிகரித்துக்கொண்டே செல்லும்!

இவர்கள் சேவை நல்லபடியாக வளர ஆரம்பித்தது. சேரிப்பெண்கள் மகிழ்வோடு இருந்தார்கள், கிடைத்த உபரி வருவாயில் குழந்தைகள் நிறைவாக உண்டன. சுத்தமாக இருந்தன. பெரும்பாலான குடும்பத்து குழந்தைகள் பக்கத்திலிருந்து "கோர்ப்பரேஷன்'' பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்தன!

"ஒரு வர்க்கம் தன் வேர்களைப் பரப்பிச் சமுதாயத்தில் தானும் ஒரு அங்கமாகப் பரவ ஆரம்பித்தது. களையெடுக்கப்படாத சமுதாயப் பூங்காவில் நன்மைகளைத் தேடிச்சென்று தீமைகளில் இதுகாலவரை தடுக்கி விழுந்தவர்கள், இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை இப்போது தெரிந்துகொண்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்ற முத்திரை ஒட்டப்பட்டு, பலவந்தமாக தலையைப் பிடித்து அமுக்கப்பட்டவர்கள், சிறிது சிறிதாக தலை

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சுதந்திர வீரர் வரிசை

# சர்தார் வேதரத்தினம்

திருஞானசம்பந்தர்-திருநாவுக்கரசர்-சுந்தரர் ஆகிய சமயகுரவர்களால் பாடப்பெற்ற திருத்தலம், திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யம். தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறப்பு வாய்ந்த இவ்வூர் சர்தார். அ. வேதரத்தினம்பிள்ளை என்னும் விடுதலைவீரர் பிறந்த ஊர், இந்த வேதாரண்யமே ஆகும்.

1897ம் ஆண்டு, பெப்ரவரி 25ந் திகதி அப்பாக்குட்டிப் பிள்ளை என்பாருக்கும் - தங்கம் மாளுக்கும் மகனாகப் பிறந்தார் வேதரத்தினம். இளம் வயதிலிருந்தே நாட்டுணர்வும். தொண்டுள்ளமும் கொண்டவராக விளங்கிய அவர், எட்டாம் வகுப்பு வரைதான் படித்தார். பள்ளிப்பருவம் முடிந்ததும் தொழில் புரிவதில் தீவிரமாக இறங்கினார். உழவுத் தொழிலிலும், உப்பு விளைவிக்கும் தொழிலிலும் அப்பகுதியில் வேதரத்தினம் சிறந்து விளங்கினார். தொழிலில் காட்டிய திறமையினால் பெரும் பொருளைக் குவித்தார். உழைப்பால் உயர்ந்த அவர் அனைவராலும் பாராட்டப்பட்டார்.

தாய்மொழியாகிய தமிழோடு ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு, சம்ஸ்கிருதம், உருது, வங்காளம் ஆகிய மொழிகளைச் சுயமுயற்சியினால் நன்கு அறிந்தார். தமிழ் இலக்கியத்தில் வேதரத்தினம் பேரார்வம்கொண்டு, திருக்குறள், தாயுமானவர் பாடல்கள் முதலியவற்றைப் பயின்றதோடு, காந்தியடிகளின் நூல்களையும், டால்ஸ்டாயின் நூல்களையும் விரும்பிப் படித்தார். பகவத்கீதை, அவர் விரும்பிப் படித்த மற்றொரு நூலாகும்.

1919ம் ஆண்டு அவருக்கு வட இந்தியா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே சென்றதன் பயனாகக் காந்தியடிகளைக் கண்டார். அச்சந்திப்பு, அவருக்கு நாட்டு விடுதலை உணர்வினை ஊட்டியது. இந்தியப் பெருநாட்டின் பல் வேறு பகுதிகளிலிருந்த தேசியத் தலைவர்களின் தீவிரப் பணியினால் காங்கிரஸ்கட்சி சுதந்திர வேட்கையினை எங்கும் எழுப்பியிருந்தது. அந்த வேட்கையில் வேதரத்தினம் தம்மையும் இணைத்துக்கொண்டார்.

இன் பின்னர் வேதரத்தினத்தின் வாழ்க்கைப் பாதை புதிய திசை நோக்கிச் சென்றது. உழவையும், உப்புத் தொழிலையும் மறந்து. நாட்டையும், மக்களையும் பற்றி மிகுதியாக நினைத்தார். தம் பிறந்த ஊரான வேதாரணியத்தை, தேசிய விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்புடைய இடமாக ஆக்கினார்; இதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. 1926ம் ஆண்டு வேதாரணியத்தில் மாவட்ட அரசியல் மாநாடு ஒன்று நடந்தது. அதன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தவர் வேதரத்தினம் அவர்கள். பின்னர் 1930ல் நடைபெற்ற மாநில அரசியல் மாநாட்டின் வரவேற்புக் குழுச் செயலாளராகவும் விளங்கினார். இவ்வாறு மாநாடுகளை நடத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல், போராட்டக் களத்திலேயும் துணிவாக இறங்கினார் வேதரத்தினம்.

1930ம் ஆண்டு, ஆங்கிலேய ஆதிக்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை அடுத்து நாடெங்கும் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்தது. தஞ்சை மாவட்டத்தில் இப்போராட்டம் வெற்றி பெற உழைத்தவர் வேதரத்தினம் அவர்களே. தஞ்சையிலிருந்து வேதாரணியம் நோக்கிப் போராட்ட வீரர்கள் உணர்ச்சியோடு முழக்கம் எழுப்பிச் சென்றனர். அந்த உப்பு யாத்திரையின் விளைவாக, அந்நாளைய அரசு வேதரத்தினத்தைச் சிறை செய்தது ஆறு மாதகாலச் சிறைவாசத்துடன், 200 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அதோடு நில்லாமல் அவரது சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தது அந்நிய அரசு. உப்பு விளைந்த நிலத்தையும், உழவுசெய்த நிலத்தையும் இழந்தார் வேதரத்தினம். ஆனால் விடுதலை வேட்கையை மட்டும் இழக்கவில்லை, சொத்துக்களைப் பறிமுதல் செய்த ஆங்கில அரசால் அவரது நாட்டுப்பற்றைப் பறிமுதல்செய்ய இயலவில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில விவசாயிகள்—தொழிலாளர்கள் மாநாடு ஒன்று 1931-ம் ஆண்டு நடைபெற்றது. அந்த மாநாட்டில் இவருக்கு சர்தார் என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது. அன்று முதல் இவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை என்றே அழைக்கப் பெற்றார்.

காந்தி—இர்வின் உடன்படிக்கையின்போது கள்ளுக்கடை மறியலில் தீவிரமாக ஈடுபட்டார். சுதந்திரப் போராட்டத்தில் பலமுறை பங்கேற்றுச் சிறைசென்றார். 1931—32ம்

**வி. ரவிச்சந்திரன்**

ஆண்டுகளில் காங்கிரஸ் நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டு பல மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். அப்போது அவர் கடலூர்—வேலூர்—திருச்சி—மதுரை ஆகிய இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில்சிறை வைக்கப்பட்டிருந்தார். 1937ம் ஆண்டிலும் சிறைசெல்ல நேரிட்டது.

1937ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது தஞ்சை மாவட்ட மக்களுக்கு தேவையான பல வசதிகளைச் செய்தார். வெள்ளம்......புயல்-வரட்சி முதலான இயற்கைக் கொடுமைகள் நேரிட்ட போதெல்லாம் 'சர்தார்' பொருள்திரட்டி மக்கள் துயர் நீக்கும் பணியில் ஈடுபட்டார்.

1939ம் ஆண்டு உலகப்போர் தொடங்கியபோது ஒத்துழைக்க மறுத்து நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றதால் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் ஒன்பது மாதச் சிறைவாசம் அடைந்தார். இம்முறை திருச்சி சிறைச்சாலை அவரை வரவேற்றது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு செயலாற்றியதோடு மனநிறைவு கொள்ளாத சர்தார் வேதரத்தினம், மக்கள் நலப்பணிகள் பலவற்றில் அக்கறை கொண்டார். அதன் விளைவாகத் தமிழ் மக்கள் பெற்ற நன்மைகள் அளவிலாதவை.

சர்தார் வேதரத்தினம் சொந்த வாழ்க்கையில் ஒழுக்கசீலராக வாழ்ந்தார். கொண்ட கொள்கையிலிருந்து சற்றும் வழுவாதவர் காந்தியக் கொள்கைகளை கனவிலும் மறவாது பணியாற்றியவர், நாட்டு மக்களுக்கு அயராது தொண்டாற்றியவர், எளிமையான வாழ்வைப் பின்பற்றினார் தூய்மையான கதர் ஆடையையே அணிந்தார். தம் ஆடைக்குத்தேவையான கதர் நூலைத்தாமே நூற்றார் உடல் தூய்மையையும் உள்ளத் தூய்மையையும் பேணினார். ஆதலால் திங்கட்கிழமை தோறும் உண்ணா நோன்பும் மௌன விரதமும் இருந்தார்.

தாய்மொழியான தமிழில் மிகுதியாகப் பற்றுக்கொண்டவர் சர்தார் வேதரத்தினம். [illegible] ருவர். சிறந்த நூலாசிரியர். வேதாரணியம் என்ற பெயரில் இனிய நூல் ஒன்றினை எழுதியுள்ளார். தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு அக்காலத்தில் முயன்றார். தேசிய மொழியாகிய இந்தியை அனைவரும் கற்கவேண்டுமென்று வற்புறுத்தினார்.

1957-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்கு சீரிய தொண்டாற்றினார்.

இறுதிக் காலம் வரை மக்களுக்காகவே வாழ்ந்த அவர் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் 24-ம் திகதி இயற்கை எய்தினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறந்த பணிபுரியும் தமிழக வீரர்களுள் குறிப்பிடத்தக்கவர் சர்தார் வேதரத்தினம் அவர்கள்.

வேதாரணியத்தில் மறைக்காட்டு மணாளர் திருக்கோயில் திருக்கதவத்தை அப்பரும் சம்பந்தரும் பதிகம் பாடி திறக்கவும் மூடவும் செய்தனர். அதே ஊரில் மக்கள் உள்ளங்களில் விடுதலை உணர்ச்சியை ஊட்டவும் அன்னிய ஆட்சியை ஓட்டவும் சர்தார் வேதரத்தினப் அரும்பாடு பட்டு வெற்றி பெறச் செய்தார்.

## எழுபதுரூபாசம்பளஏற்றம் எத்தனை ஏமாற்றம்

... பத்மாசனி

எழுபதுரூபா சம்பள ஏற்றம் எத்தனை ஏமாற்றம்-இங்கு
அழுகிற அரசு ஊழியர்க் கெல்லாம் அத்தனை தடுமாற்றம்

(1)

நாளுக்கு நாளாய் விலைகள் ஏறி நம்மை வாட்டுது
ஆளுக்குப் பத்தாய் சோலி மிஞ்சி அதுவும் தேய்க்குது
கூழுக்கும் இங்கு வழியே இல்லாக் கோலம் மாறுது
பாழுக்கு அரச பதவிபெரும் பாடுபடுத்துது
(எழு)

(2)

தனியார் துறைக்குப் போக்குவரத்தைத் தாரை
வார்த்ததால்
அநியாயமாய் அரசுஇலாபம் அற்றுப் போச்சுது
இனியார்நட்டம்? ஏழைதலை மேல் ஏற்றப்படுகுது
கனிவாய்ப்பேசி ஏச்சுப் பிழைக்கும் காரியம் நடக்குது
(எழு)

(3)

உணவுக் கூப்பன் உள்ள ஏழை உசாராய் வாழ்கிறான்
தினமும் வேறு தொழிலும் கூடத் தேடி உழைக்கிறான்
இரவும் பகலும் மாடாய் உழைத்தும் அரசசேவையில்
வரவும் செலவை மிஞ்சி மேலும் வாட்டி வளருது
(எழு)

(4)

முதலாளிக்கு அரசுக் கொள்கை முழுக்க இலாபமாம்
இதனால் என்றும் அவர்கள்பாடு எக்கச்சக்கமாம்
தொழிலாளிக்கு அதுவும் இந்தச் சம்பளகாரர்க்கு
பழியாய்ப்போச்சு ஐயோபாவம் துடித்துப்பதைக்கிறார்

(5)

அரசசேவை எல்லாம் ஒழித்துத் தனியார் மூலமாய்
அரசு நடத்தும் ஆசை ஒன்று அறியப்படுகுதோ? .
விரைவில் அந்த ஆட்சி வந்தால் காட்சி நல்லது
தரையில் உள்ள தனியார் உச்ச நடனமாடுவார்
(எழு)



## நாடு திரும்பினார்

கோண்டாவிலைச் சேர்ந்தவரும் விவசாயத்துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுவருபவருமான லயன் திரு. எஸ். பத்மநாப நெதர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் விஜயம்செய்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

நெதர்லாந்தில் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியிலும், கால்நடை, பன்றி, கோழி வளர்ப்புத்துறையிலும் அவர் பயிற்சிபெற்றார். நெதர்லாந்தில் வுல்ஃப் அன் வுலஃப் ஸ்தாபனத்தாரின் விருந்தினராக இவர் தங்கியிருந்தார். ஒல்லாந்தில் விதைஉருளைக் கிழங்கு ஏற்றுமதியில் இவர்கள் பெயர் போனவர்கள். இந்த ஸ்தாபனத்தில் 75வது வருடாந்த விழாவிலும் இவர் கலந்துகொண்டார்.

மேற்கு ஜெர்மனிக்கு விஜயம்செய்த இவர் அங்கு பேயர் கம்பெனியாரிடம் விளைபொருள் பாதுகாப்புபற்றி ஆராய்ந்து அறிந்தார். ஆஸ்ட்ரியா, வியன்னு, சால்ஸ்பேர்க், பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலும் விஸ்தாரமாகப் பயணம்செய்தார். பல பல்கலைக்கழகங்களுக்கும் விஜயம் செய்தார். பிரிட்டனில் நேஷனல் பார்மேஸ் தொழிற்சங்கத்துடனும் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு மூன்றாம் உலகநாடுகளில் மேற்கொள்ளப்படும் விவசாயத்திட்டங்கள் பற்றி அறிந்துகொண்டார்.

## கதிரேசர்பிள்ளையின் 'பாரதம்தந்த பரிசு'

'பாரதம் தந்த பரிசு' என்ற நாடக நன்நூல் வெளியீட்டு விழா அண்மையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உப அதிபர் தலைமையில் கோலாகலமாக நடத்தப்பட்டது நூலாசிரியர் கவிஞர் கதிரேசர்பிள்ளை பற்றி கலைப் பெருமக்கள் வெளியிட்ட கருத்துக்கள் இரசிகர் உலகு அறிய வேண்டியவைகளே. "பாரதத்தின் ஒருசில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து காங்கேயன் சபதம், ஜீவமணி, அம்பையின் வஞ்சினம், கோமகளும் குருமகளும், குருதட்சிணை என்ற தலையங்கங்களில் பிள்ளையவர்கள் வகுத்த நாடகங்கள். நடிப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமைந்த வசனங்களால் அமைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்'' என்கிறார் நாடகவித்தகர் கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்கள். "கடந்த ஓரிரு ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ்நாடக உலகிலே விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய உத்திகளிலே நாடகங்கள் பல மேடையேறுகின்றன. நாடக வளர்ச்சிக்குத் தரமான பிரதிகள் அவசியம். அத் தேவையினைப் பூர்த்திசெய்யும் வண்ணம் பல நாடகத் தொகுதிகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்த வரிசையிலே 'பாரதம் தந்த பரிசு' தன்னாலான பணியினைச் செய்யும் என்பது என் நம்பிக்கை' 'என உபவேந்தர் சு. வித்தியானந்தன் கருத்துத் தெரிவிக்கிறார்.

"கதிரேசர்பிள்ளை பாட்டெம்முதுவார். புராணபடனம் செய்வார், மேடையில் அழகாகப் பேசுவார். மகாஜனக் கல்லூரியின் பாரம்பரியத்திலும் ஊறியவர். குருகவி வே. மகாலிங்கசிவம் என்றும் மலையருவியின் இன்பத்தையும் பிள்ளையவர்கள் பெற்றுள்ளார். கதிரேசர்பிள்ளை அம்பாள் அடியவர்: தாய்மைக்கடவுளை நெஞ்சுருகி வழிபடுபவர்; தாய்மையைப் போற்றும் இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களைப் படிப்பவர்; ஆக, அறத்தை அடிப்படையாக வைத்த நாடகங்களில் அவரின் நாட்டம் சென்றமை இயல்பே'' என்கிறார் கலைமாமணி த. சண்முகசுந்தரம். ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி சண்முகதாஸ்,

## சமர்ப்

'நவராத்திரி' என்...
கொழும்பில் ஒரே குதூக...
விஜயதசமி ஈறாக, ப...
நாள்களும் அரங்குகள் அ...
தும் ஒரே ஆரவாரம்!
போட்டா போட்டியா...
நிகழ்ச்சிகள்: பல்வேறு தி...
களங்கள், நிறுவனங்களின்...
ரவில் இவை நடைபெறு...
அரங்குகளை ஒழுங்கு ...
திலே போட்டி: நிகழ்ச்...
அமைப்பிலே போட்டி: ...
சிகளிலே போட்டி!
பொதுவாக, இவ்வரங்...
லெல்லாம் நாட்டியத்து...
தான் முக்கிய இடம்.
நாட்டியக் கலைஞர்...
பின்னணி — பக்கவா...
கலைஞர்களும் இந்நாட்...
சுறுசுறுப்பாக காணப்ப...
கள்.
திறமையான நிகழ்...
அளிப்பதிலே அவ...
குள்ளே போட்டி இ...
சில சமயங்களிலே, எந்...
குக்கு எந்த நிகழ்ச்சிக்...
வது? என்பதிலே ந...
லாம் 'திண்டாட்ட...
இருக்கும்.
ஆக, இது மன்துக்கு...
சிலையும்' தலைநகரிலே...
பெருமையையும் அளி...
என்ன?

ஆ. சிவநேசச்செல்வ...
பொன்னுத்துரை
நூலின் பலவேறு அ...
யும் தொட்டு உரை...
னர். பிள்ளையவர்க...
வாழ்வு வாழும் கலை...
செல்வி தங்கம்மா
குட்டிபோற்றினர்கள்...
மாணவர்கள் சாணி...
5000க்கு மேல் ...
வெளியிடப்பட்ட
வெளியீட்டுவிழாவில்...
பிள்ளையவர்களுக்கு
ளை போர்த்தினர்...
தமிழ் வித்தகர் என்ற...
மும் சூட்டினர்.
பொழுதே கலைஞர்க...
விக்கப்படுவது வள...
வேண்டிய பண்பாகு...
ஏ.

காம்



உ...

சாதனங்கள் சிறந்தவை. இயக்க இல...

இலகுவான பாவனைக்...

வி...

செய்வதற்கு நவீன சக்தியைக்...

அடைக்கப்பட்டுள்...

காம்பி...
லி 200 கார்ரிட்ஜ்கள் (190 கிராம்) ஒவ்வொ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்!

மாலி

'நவராத்திரி' என்றால் கொழும்பில் ஒரே குதூகலம்.

விஜயதசமி ஈருக, பத்து நாள்களும் அரங்குகள் அனைத்தும் ஒரே ஆரவாரம்!

போட்டா போட்டியாககலை நிகழ்ச்சிகள்: பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களின் ஆதரவில் இவை நடைபெறும்.

அரங்குகளை ஒழுங்கு செய்வதிலே போட்டி: நிகழ்ச்சிகள் அமைப்பிலே போட்டி: நிகழ்ச்சிகளிலே போட்டி!

பொதுவாக, இவ்வரங்குகளிலெல்லாம் நாட்டியத்துக்குத்தான் முக்கிய இடம்.

நாட்டியக் கலைஞர்களும், பின்னணி — பக்கவாத்தியக் கலைஞர்களும் இந்நாட்களிலே சுறுசுறுப்பாக காணப்படுவார்கள்.

திறமையான நிகழ்ச்சிகளை அளிப்பதிலே அவர்களுக்குள்ளே போட்டி இருக்கும். சில சமயங்களிலே, எந்த அரங்குக்கு எந்த நிகழ்ச்சிக்கு செல்வது? என்பதிலே நமக்கெல்லாம் 'திண்டாட்டமாக'வும் இருக்கும்.

ஆக, இது மனதுக்கு மகிழ்ச்சியையும்' தலைநகரிலே ஒரு பெருமையையும் அளிப்பதாக, என்ன?

ஆனல் பாருங்கள், எத்தனை எத்தனை பெருமைகளைக் கொண்டிருந்தாலும், எது எதற்காகவெல்லாமோ பெருமைப்பட்டாலும் சிலவற்றுக்காக வருத்தமுறவுந்தான் நேர்கிறது!

சரஸ்வதி மண்டபத்தில் திணைக்களம் ஒன்றின் ஆதரவில், ஒருநாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டுருந்தன.

அந்த நிகழ்ச்சிகளின் நிரலிலே இரண்டு நாட்டியப்பள்ளிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன. இன்று, தனிநடர் நிகழ்ச்சி, மற்றையது குழு நிகழ்ச்சி. தனிநபர் நிகழ்ச்சி முதலில் நடைபெறுவதாகவிருந்தது.

ஆனல், மேடையிலே திரைக்குப்பின்னல், இந்த இரு 'கோஷ்டி'களிடையேயும் ஏற்பட்ட 'மோதலில்' ஒருகோஷ்டி அரங்கிலிருந்து வெளி நடப்புச் செய்தது!

முதலில் நடைபெறவிருந்த தனிநபர் நிகழ்ச்சியை ஆரம்பிக்க பக்கவாத்தியக் கலைஞர்கள், நட்டுவாங்கம் செய்யும் அந்த நாட்டியப் பள்ளியின் இயக்குநர் ஆகியோர் மேடையில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, மற்றைய நாட்டியப் பள்ளிக்காரர் வந்து, 'இப்போது எங்களுடைய நிகழ்ச்சி' என்று கூறி, தங்களின் பிள்ளைகளை மேடையில் ஏற்றினர்கள்!

நிகழ்ச்சி நிரலில் இரண்டாவதாகவே தங்களின் நடன நிகழ்ச்சி இடம்பெற்றிருந்தாலும், குறிப்பிடப்பட்ட நேரத்தின்படி இப்போ எம்முடைய நிகழ்ச்சிதான் நடைபெற வேண்டுமென்ற அவர்கள், தங்களுடைய பக்கவாத்தியக்காரர்களையும் கொணர்ந்து அமர்த்தினர்கள்! பற்றைய கோஷ்டியின் பிரச்னையைத் தீர்க்க அமைப்பாளர்களைத் தேடினர்கள்; ஆனல். அமைப்பாளர்கள் 'தலை மறைவு'!

உடனே, உடை - ஒப்பனைகளோடு அவர்கள் பண்டபத்திலூடு வெளிநடப்புச் செய்து காரில் ஏறிச்செல்ல: வேருெரு மண்டபத்தில் மற்ருெரு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு தங்களுக்குரியபாடகி வந்துசேராத போதும் ஆசிரியை தானே நட்டுவாங்கத்துடன் பாடலையும் பாட. அந்த மற்றைய கோஷ்டியின் நிகழ்ச்சி மேடையில் ஆரம்பமானது.

நிகழ்ச்கள் சிலவற்றை சிலருக்கு சமர்ப்பணம் செய்கிருர்கள், இந்தச் சப்பவங்களெல்லாம் யாருக்குச் சமர்ப்பணம். என்னைப் பொறுத்தவரையில் அந்தவெளி நடப்பு நியாயமானதும் அவசியமானனது மாகவே எனக்குப் பட்டது. ஆனலும் கலைஞர்களுக்கும் கலாபிமானிகளுக்கும் இச சர்ப்பணம்!

---

ஆ. சிவநேசச்செல்வன். ஏ.ரி. பொன்னுத்துரை நாடக நூலின் பலவேறு அம்சங்களையும் தொட்டு உரைநிகழ்த்தினர். பிள்ளையவர்கள் சீரிய வாழ்வு வாழும் கலைஞன் என செல்வி தங்கம்மா அப்பாக் குட்டிபோற்றினர்கள். பழைய மாணவர்கள் சாணிக்கையாக 5000க்கு மேல் செலவிட்டு வெளியிடப்பட்ட இந்நூல் வெளியீட்டுவிழாவில் கதிரேசர் பிள்ளையவர்களுக்கு பொன்னுடை போர்த்தினர்கள். முத்தமிழ் வித்தகர் என்ற பட்டமும் சூட்டினர். வாழும் பொழுதே கலைஞர்கள் கௌரவிக்கப்படுவது வளர்க்கப்பட வேண்டிய பண்பாகும்.

ஏ. ரி. பொ.

---

ஒரு சாதனை

# 'அருள்' படைத்த தூரத்து ஓவியங்கள்

"மனத்திலும், அன்றட வாழ்விலும் ஏற்படும் சின்னஞ்சிறு சலனங்களையும் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டும் ஆற்றல் மிக்க எழுத்தாளர், திரு. அருள். சுப்பிரமணியம் அவர்கள்.

'தூரத்து ஓவியங்கள்' என்ற மர்ம நாவலைப் படைத்து, தமிழ் இலக்கியத்துறையில் ஒரு சாதனையை நிலைநாட்டியதற்காகத் திரு. அருள். சுப்பிரமணியம் அவர்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டதல்ல, மேலேயுள்ள பாராட்டுரை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர் ஐவரைக் கௌரவிக்குமுகமாக யாழ். பொதுசன நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் ஒரு விழா எடுக்கப்பட்டது. விழா நாயகருள் ஒருவர் திரு. அருள் அவர்கள். 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' என்ற அவரது சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாவலை ஆராய்ந்து மதிப்புரை செய்யவும், அதன் ஆசிரியர் திரு. அருள் அவர்களுக்குப் பாராட்டுரை வழங்கிக் கௌரவிக்கவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது.

விழாவிலே சாகித்திய மண்டல உறுப்பினர்களும், பேராசிரியர்களும், பேரறிஞர்களும், இலக்கியக்காரரும் ஏராளமாகக் கலந்துகொண்டனர். அவ்விழாவிலே திரு. அருள். சுப்பிரமணியம் அவர்களையும், அவரது எழுத்தாற்றலைப் பற்றிக் குறிப்பிடும்போது நான் கூறிய பாராட்டுரையில் ஒரு வசனமே மேலேயுள்ளது.

இந்தப் பாராட்டுரைக்குத் தாம் எல்லா வகையாலும் பாத்திரரே என்பதைத் திரு. அருள் நிறுவியுள்ளார்.

ஒற்றைக் காலில் நிற்பது முதல், நச்சுப்பாம்போடுறைவது வரை உடல்-மன ஆற்றல்களை வெளிப்படுத்தச் சாதனை புரியும் இந்த நாட்களில், நாவல் இலக்கியத்தில் ஒரு துறையான மர்மநாவல் துறைக்கு இருபதாயிரம் ரூபாவைப் பரிசாக வழங்க முன்வந்ததே தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சாதனையாகும். தமிழ் கூறும் நல்லுலகெங்கும் உள்ள எத்தனையோ "ஜாம்பவான்கள்" எழுதிக் குவிப்பார்கள். ஏகபோகங்கள், சாதாரண எழுதுவினைஞரைக் கலக்க வைக்கும் வாழ்க்கைப் பிரச்சினை என்ற நிலைகள். இவற்றின் மத்தியில் இருபதாயிரம் ரூபாவைப் பரிசாகப் பெறுதல் மகத்தான ஒரு சாதனை என்பது வெறும் உபசார வார்த்தையல்ல.

நூலாராய்ச்சி, நூற்பதிப்பு என்ற துறைகளில் இலங்கை அறிஞர்கள் முன்னேடியாகத் திகழ்ந்தவர்கள். நாவல் துறையிலும் முன்னேடிகள் நம் நாட்டவர். அந்த முன்னேடிகளின பரம்பரையில் "தூரத்து ஓவியங்கள்" என்ற மர்ம நாவலைப் படைத்த திரு. அருள் சுப்பிரமணியம் அவர்களும் ஒருவராகக்கணிக்கப்பட்டு விட்டார்.

"ஆனந்த விகடன்" எடுத்த பொன்விழாவின் உந்துதலால் தமிழ் இலக்கிய வரலாற்றில்- இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்படத் தக்க ஒரு கட்டத்தைத் திரு. அருள் அவர்கள் தொடக்கி வைத்துள்ளார். இதனைத்தொடர்ந்து பேண, நம் நாட்டுப் பத்திரிகைகளும், கலாச்சார அமைச்சும் முன்வருதல் பாராட்டுக்குரிய தூய்மையும்.

"பிற நாட்டார் தலை வணக்கஞ் செய்ய"த் திரு. அருள் அவர்களின் "தூரத்து ஓவியங்கள்" பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படவேண்டும் என வேண்வாக்கொள்கிறேம்.

தமிழ் இலக்கிய உலகின் சார்பிலும், "ஈழநாடு" சார்பிலும் திரு. அருள் சுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

அன்னரது இலக்கியப் பணி மென்மேலும் தொடரட்டும்.

— சு. இராஜநாயகன்

---

பிரபல எழுத்தாளரும், கவிஞருமான
**சொக்கன்**
எழுதும்
**"ஆசைக்கடலின் ஆழச் சுழிகள்"**
பா நாடகம் அடுத்த வாரமலரில் ஆரம்பமாகிறது

---

## பஸ் சிரிப்பு

"என்ன திடீரெண்டு நீர் ஒரு பஸ் வாங்கிட்டீர்..........?"

"பஸ் கட்டணம் கூடுதலான பிறகு வேலைக்கு இரண்டுகிழமை நடந்தே போனேன். இவ்வளவு காசு மிஞ்சிப்போச்சுது அதில ஒரு பஸ் வாங்கிட்டேன்..........!"

"..........?..........?.....!....."

ஃ ஃ ஃ

"முன்பு மலை ஏற்றத்தில மெதுவாப்போன பஸ் இப்பவெல்லாம் வேகமாகப்போகுதே .....?

"பஸ் கட்டணம் 'ஏற்றத்தோடு' அப்படித்தான்...!....."

"....?....!....."

---


# காம்பிங் காஸ்.. சக்தி நிறைந்தது
## எங்கும் எப்பொழுதும் பாவிக்கக் கூடியது



உணவு சமைக்கவோ இருளைப்போக்கி வெளிச்சத்தை ஏற்றவோ,
தூக்கிச் செல்லக்கூடிய காம்பிங் காஸ்
...ங்கள் சிறந்தவை. இயக்க இலகுவானவை, பாவனைக்கு எப்பொழுதும் தயாராக இருப்பவை.
இச் சாதனங்கள் புட்டேன் காஸில் இயங்குகின்றன.
இலகுவான பாவனைக்கென கைக்கடக்கமான நில அடைப்புகளிலும் குவளைகளிலும்
விற்பனைக்குள்ளன. தேவை ஏற்படும் பொழுதெல்லாம் பாவனை
செய்வதற்கு நவீன சக்தியைக் கொண்ட மீள் நிரப்புக் குவளைகள் எப்பொழுதும் இடைக்கும்,
இறக்குமதி செய்யப்பட்ட மீள் நிரப்புக் குவளைகள்
மீண்டும் நிரப்ப முடியாமல் பாதுகாப்பாக
அடைக்கப்பட்டுள்ளன. வேண்டிய நொகை மீள் நிரப்பிகள் விற்பனைக்குள்ளன.
காம்பிங் காஸ் ஸ்டோவ் ரூ. 180/-ம் மேலும். லாம்புகள் ரூ. 240/-ம் மேலும்
கார்ரிட்ஜ்கள் (190 கிராம்) ஒவ்வொன்று ரூ. 20/- பிரத்தியேக மான்றில்களும் மின்னிகளும் இடைக்கும்



விசாரணைகள்:
விற்பனை முகாமையாளர்,
தொலைபேசி: 21464

கொழும்பு காஸ் அன்ட் வாட்டர் கொம்பனி
லிமிட்டெட்டின் மரபு உரிமை பெற்ற
இலங்கை அரசாங்கம்,
காஸ் வேர்க்ஸ் ஸ்ட்றிட்,
கொழும்பு 12.
தொலைபேசி: 32311, 32312, 37042, 37043

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவிதி!

வீட்டுவாசலைக் கூட்டிக் கொண்டிருக்கிறேன். நேரம் எட்டுமணி. பாடசாலைப் பிள்ளைகள் சாரிசாரியாகப் பாடசாலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை நான்கண்டவுடன் என்னையே நான் திட்டிக் கொள்கிறேன்:

இரண்டு வருடங்களுக்கு முன், நானும் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தேன். ஆனால் சிலமாதங்களின் பின் போக மனமின்றி வீட்டிலே நின்றுவிட்டேன், அப்பொழுது என் அப்பாவும் அம்மாவும் என்னைக் கண்டித்தார்கள். பாடசாலைக்குப் போகும்படி கூறி, புத்திமதியும் கூறினார்கள், நான் அவர்களின்

சொற்களையெல்லாம் தட்டிக் கழித்துவிட்டு, என் தலையில் நானே மண்ணைக் கொட்டிவிட்டு, பாடசாலைக்குப்போகாமல் வீட்டிலே நின்றேன்.

என் அப்பா அம்மாவின் சொற்களை யெல்லாம் கேட்டு பாடசாலைக்கு ஒழுங்காகப் போயிருந்தால்........ நினைத்துப் பார்த்தபோது வேதனையாகத் தான் இருந்தது.

இப்பொழுது இந்த வீட்டில் மாதம் நூறு ரூபா சம்பளத்துடன் வேலைக்காரனாக என்னை என் அப்பா அனுப்பியிருக்கிறார்.

ஏய் குமார்! என்ன வாசலைக் கூட்டாமல் நிற்கிறாய்'' எஜமானின் குரல் கடுகடுப்புடன் வெளிவந்தது.

''இவ்வளவு நேரமும் இந்த வாசலைக் கூட்ட முடியாமல் நிற்கிறாய்.''

''இதற்கு தண்டனையாய் உனக்கு இன்று காலைச்சாப்பாடும், மத்தியானச் சாப்பாடும் இல்லை'' தொடர்ந்து அவரின் குரல் வெளிவந்தது.

இது எனக்கு ஆச்சரியமாக வில்லை, இப்படி எத்தனையோ நாள் இத்தண்டனை கிடைத்துள்ளது. வாசலைக் கூட்டி முடித்துவிட்டு வந்தேன். ''கெதியாய் வந்து பாத்திரங்களை மினுக்கி வை'' என்று எஜமான் கட்டளையிட்டார்.

அதையும் செய்து முடித்து விட்டேன். பசி வயிற்றைக் கிள்ளுகிறது. என்ன செய்வது? ''குமார்! கடைக்குப் போய் சமைப்பதற்குரிய பொருட்களையெல்லாம் வாங்கி

வா'' என்று கூறி, அதற்குரிய பணத்தையும் எஜமான் தந்தார். கடைக்குப் போய்

பொருட்களையெல்லாம் வாங்கி வந்து மிகுதிப் பணத்தையும் எஜமானியிடம் கொடுத்தேன்.

அவர் பொருட்களை யெல்லாம் எடுத்து கத்தரிக்காயைப் பார்த்துவிட்டு ''என்ன இது

## குறுங்கதை

வெறும் முத்தல் கத்தரிக்காயை வாங்கிவந்திருக்கிறாய்'' இதைவிட வேறு கத்தரிக்காய் இல்லையம்மா. ''இல்லையென்றால் விட்டிட்டுவாறதுதானே; உன்னை யார் முத்தல் கத்தரிக்காயை வாங்கிவரச் சொன்னது'' இச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு நின்ற எஜமான், பெரிய தடியொன்றை எடுத்துவந்து என்னை அடித்தார். பசியின் கொடுமையும் அடியின் நோவும் தாங்கமுடியாமல் மயங்கி, விழுந்தேன்.

அத்துடன் எஜமான் அடிப்பதை நிறுத்தினார்.

மயக்கம் தெளிந்து எழுந்தவுடன் மீண்டும் வேலைகள் செய்யும்படி எஜமான் கட்டளையிட்டார், முன்பே என் அப்பாவும் அம்மாவும் சொன்ன சொல்லின்படி பாடசாலைக்குச் சென்று படித்திருந்தால், இந்நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. என் தலைவிதியை நினைத்து நானே என் மனதினுள் புழுங்குகின்றேன்.

(யாவும் கற்பனை)

**-வி. இளங்குமார்-**
புத்தூர் சோமாஸ்கந்த
கல்லூரி

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிமிர்கிறார்கள். இறந்த காலத்தை ...மையாகவும், நிகழ் காலத்தை நிச்சயமற்றதாகவும், எதிர்காலத்தை ஏக்கம் நிறைந்ததாகவும் நினைத்து வந்தவர்கள் ஓர் ஆயுதமற்ற புரட்சியினால் ஆயுள்பூராவும் மறுமலர்ச்சி பெற்றவர்களாகஅந்த ஏழைகள் ஆகிக்கொண்டிருந்தனர்.''

நாட்கள் மெல்லச் சென்று கொண்டிருந்தன.

அவர்கள் தலைகுனிந்தகாலத்தில் விதிக்கு வேலையில்லை. தலைநிமிர்ந்த ஏழைகளாக மாறும்போது , காலதேவனுக்குப் பொறுக்கவில்லை.

சமூகத் தொடர்புகள் நிலையத்திற்கும், அதன் தொண்டர்களுக்கும் ஒரு செல்வந்தர் உதவிவந்தார். பர்மியப் பணக்காரர். பர்மாவில் ஒரு இறப்பர்த் தொழிற்சாலை நடத்திப் பலகோடிசம்பாதித்தவர். யுத்தத்தின்போது பர்மிய அகதிகளுக்குப் பொருளுதவி செய்துவிட்டுத் தாய்நாட்டில் நிரந்தரமாகிவிட்டார். இங்கும் பல சமூக ஸ்தாபனங்களுக்கு உதவி வந்தார்.

ஒருசமயம் இடைத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டபோது சில சுயேச்சை வேட்பாளர்கள் அவரிடம் பண உதவி கேட்டனர். அவர்களது உள்ளத்தில் சமூகசேவை இல்லை: உதட்டில் தானிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட அவர் உதவிசெய்ய மறுத்துவிட்டார். அவர்களாலும் தேர்தலில் நிற்கமுடியவில்லை.

இப்பகைமைச் சாம்பல் பூத்த நெருப்பாக அந்த அபேட்சகர்களது இதயத்தில் கனிந்து கொண்டிருந்தது. பழிவாங்க சமயம் தேடினர். சேரிப்பகுதி முன்னேற்றம்பற்றி அவ் வட்டாரத்திற் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. அந்த முன்னேற்றத்தின் பின்னணி பற்றி ஆராயப்பட்டபோது செல்வந்தரின் பெயரும் அடிபட்டது.

பழிவாங்க நினைக்கும் சமூகப் புல்லுருவிகளுக்கு இச்செய்தி குதூகலமளித்தது. ஒரு சில தினங்கள் சேரியை நோட்டம்விட்டனர். கட்டாக்காலிக் கும்பல் அவர்கள் பார்வையிலிருந்து தப்பவில்லை.

ஒரு விடுமுறை நாள்.....! மாலை நேரம், நகரத்தின் ஒதுக்குப்புற மூலையிற் காணப்பட்ட மட்டரகமான சாராயத் தவறணையில் அந்தத் திருவாளர்கள் கூடியிருந்தனர். சேரி இளைஞரில் ஒரு சிலர் பவ்யமாக ஒதுங்கி மூலையில் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். அபேட்சகர் தாராளமாகச் சாராய சப்ளை நடத்தினர். சிவப்பு பச்சை நோட்டுகள் கைமாறின, இளைஞர்களும் அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டினர். பல நாட்களுக்குப் பிறகு ஒரு ''கொன்ட்ராக்ற்'' ஐப் பொறுப்பேற்றதால் முகத்தில் இளிப்பு அதிகரித்தது. நன்றாக இருட்டிய பிறகு இளைஞர்களைக் காரிலேற்றிச் சேரி வாசலில் இறக்கி விட்டனர் ''அடுத்த ஞாயிறு'' மறந்துவிடாதீர்கள் எனக் கிசுகிசுக்கத்

தவறவில்லை.

●

பொழுது புலர்ந்து நெடுநேரமாகிவிட்டது. சேரிப் பெண்களிடையே அன்று மகிழ்ச்சி நிறைந்திருந்தது. இருக்காதா.....? என்ன! அவர்கள் ஆக்கங்கள் விற்பனைக்காக அனுப்பப்பட்டுவிட்டன. இன்று பணம்கொடுக்கப்படும்.

அன்றும் வழமைபோல் கொட்டகைக்கு உள்ளிருந்த வயர்கள், ஓலைகள் போன்றவற்றைத் தாழ்வாரத்தில் கொண்டுவந்து எல்லோரும் தத்தம் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். நேரம் நடுப்பகல் பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. வேலை முடியும் நேரம்; இன்று வருவாய் நாளாதலால் விற்பனைப் பணத்தை வாங்கிக்கொண்டு செல்லவேண்டும். இருந்தாற்போல் கொட்டகையின் பின்புறம் எதுவோ விழும் பயங்கரச்சப்தம்; எல்லோரது பார்வையும ஒருங்கே திரும்பியது. ஓ.... இதென்ன! வேயப்பட்டிருந்த காய்ந்த ஓலைகள் டடபடவென்று எரிய ஆரம்பித்தன. உச்சி வெயிலின் அகோரத்தோடு ஓங்கி எரியும் தீப்பிழம்புகள்! வானளாவும்புகைமண்டலம். தீ வேகமாக தன் கைங்கர்யத்தை ஆரம்பித்தது. நடுக்கூரை வரை பரவி ஓலைகள், தட்டிகள் உள்ளே விழுந்தன. அங்கிருந்த வயர்கள், கூடைகளிலும் தீப்பற்றியது. எரிந்த கொட்டகையின் பின்புறம் ஒரே பொட்டல் வெளி. மிகவும் விஸ்தாரமான வெளியின் பின்னால் உயரமான சுவர். அதற்கப்பால் உயர்தரப் பாடசாலையொன்றின் நீண்ட மைதானம்! எனவே கொட்டகை பின்னாலிருந்து தீப்பற்றியபோது, அது வெளியார் கவனத்தைக் கவர வாய்ப்பில்லை! சேரியிலுள்ள குடிசைகளிலும் கைக்குழந்தைகள் தானிருந்தன.

எனவே சேரிப் பெண்கள் அலறியடித்துக்கொண்டு தண்ணீர் தேடினர். எரியும் கொட்டகையிலிருந்து குடிசைகள் பல அடிகளுக்கப்பால் தள்ளியிருந்ததால் தீ பரவவில்லை. ஆனால் கொட்டகை சாம்பலாகிக் கொண்டிருந்தது.

அகல்யா தனக்குள் புலம்பிக்கொண்டாள். ஐயோ.... கடவுளே! இந்த ஏழைகளுக்கு இன்று கொடுக்கவேண்டிய பணத்தையும் காலையில் அங்கு வைத்துவிட்டேனே! முன் பகுதியில் தீ பரவவில்லை. உடனே பாய்ந்து எடுத்தாலென்ன? எவருமே எதிர்பாரா வண்ணம் அகல்யா தீப்பிழம்புக்குள் புகுந்துவிட்டாள். அனைவரும் அலறினர். கைப்பையை எடுத்தவள், பெண்களிருந்த திசை நோக்கி வெளியே எறிந்தாள். ஆத்ம திருப்தியோடு அவள் வெளியே வர முயல் கையிலா எரியும் கொட்டகை முகப்பு அவள் மேல் விழ வேண்டும்? ஆயிற்று. எல்லாமேயாகிவிட்டது. வெளியில் இழுத்துப்போட்டபோது அவளுக்குச் சுயநினைவில்லை.

உடலெங்கும் சிவப்புத் திட்டுக்களாகத் தீக்காயங்கள், நெருப்பு வைத்த கும்பல் மனிதர்களாக மாறும்போது, அவளைக் காப்பாற்ற விரைகையில் உயிர் பிரிந்துவிட்டது. ''அவர்களது வறுமையைப் போக்க முன்வந்தவள், தன்னையே போக்கிக்கொண்டாள். ஏழைகளின் ''வறுமை''யை எடுத்து வளத்தைக் கொடுத்தவள் கரங்களில், உடலில் எல்லாம் அந்த வறுமை தன் பிரிவுக்கு அடையாளமிடுவதுபோல் செங்குருதிக் காயங்களாகப் படிந்திருந்தது. அவை வெறும் காயங்களில்லை. ''விழுப்புண்கள்.'' அவள் மேற்கொண்ட ஆயுதமற்ற புரட்சியில் கிடைத்த விரப் புண்கள்; சமுதாயப் புல்லுருவிகள் உள்ளவரை தியாகிகளின் சமாதிகளும் அதிகரித்தே செல்லும்.''

(யாவும் கற்பனை)

விலங்கியல்: 4

# க. பொ. த. (உயர்தரம்)
# புதிய பாடத்திட்டம்

**திருமதி. தி. சிதம்பரநாதன்(பி. எஸ்சி.)**
ஆசிரியை வேம்படி மகளிர் பாடசாலை

(1) வெண்ணார், மஞ்சள் நார் ஆகியவற்றின் கட்டமைப்புகளுக்கிடையேயுள்ள பிரதானவேறுபாடுகள் 4 தருக?

வெண்ணார் (1) அலை போன்ற அமைப்பு கட்டுக்களாகக் காணப்படும். (2) கிளைப்பதில்லை. சமாந்தரமான நார்கள் முழு நீளத்திற்கும் காணப்படும். (3) நார்க் குளியங்கள் நார்களின் விளிம்புகளில் உண்டு. (4) கொலாசின் (Collazen) புரதத்தால் ஆனது.

மஞ்சள் நார் (1) மெல்லியன. கட்டுக்களாக இல்லை: (2) கிளைத்து வலை வேலையைத் தோற்றுவிக்கும். (3) நார்களுக்கு அண்மையில் உண்டு. (4) இலஸ்ரின் (Elacin) புரதத்தால் ஆனது.

(2) மனிதனின் குருதி எக்காரணியை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

அகுளுத்தினோசின் (Aggluti nogen) உடலெதிரியாக்கி.

(3) குருதி உறையாமல் இருப்பதற்காக வங்கிகளில் எவ்வாறு சேமிக்கப்படுகிறது?

குருதிக்கு சோடியம் சித்திரேற்று (Sodium Citrate) சேர்க்கப்படுகின்றது. இது கல்சியம் அயன்களை அகற்றிக் குருதி நீர்ப்பாயம் உறையாமல் தடுக்கின்றது.

(4) முலையூட்டிகளின் செங்குழியங்கள் ஏனைய முள்ளந்தண்டு விலங்குகளின் செங்குழியங்களிலிருந்து எங்ஙனம் வேறுபடுகின்றது?

முலையூட்டியின் செங்குருதிச் சிறு துணிக்கையில் கரு இல்லை.

(5) குருதி உட்புகுத்தலுக்கான (குருதி மாற்றீடு) அட்டவணையை நிரப்புக?

| வாங்கி \ வழங்கி | A | B | AB | O |
|---|---|---|---|---|
| A | × | | | × |
| B | | × | | × |
| AB | × | × | × | X |
| O | | | | X |

(6) மேற்காட்டிய அட்டவணையிலிருந்து AB, O ஆகிய குருதி இன வகைகளைக் கொண்டவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

AB— ''பொதுவாங்கிகள்''.
O— ''பொது வழங்கிகள்''

(7) குருதியில் காணப்படும் பின்வரும் பொருள்களின் தொழில் முக்கியத்துவங்கள் யாவை?

(1) நிணநீர்க் குழியங்கள்—பாதுகாப்பு, (2) Ca ++—குருதியுறைதல் (புரோதுரொம்பின் துரொம்பின், (3) நடுநிலை நாடிகள் — தின் குழியச் செயலில் ஈடுபடுகின்றன, (4) எப்பாரின் — குருதியுறைதல் (துரொம்பின் எதிரி) (5) செங்கலம்—O2 கடத்துகின்றது.

(8) ஒட்சிசன் கடத்துவதற்கு, PHஐ மாறாமல் வைத்திருப்பதற்கும் உதவும் குருதியிலுள்ள முதற்கூறுகள் யாவை?

ஈமோகுளோபின்(Haemoglobin) - சோடியம் இருகாபனேற்று.

(9) பின்வரும்இழையங்கள் செய்யும் தொழிலைக் குறிப்பிடுக?

(1) பளிங்குக் கசியிழையம் — சுவாச அசைவின் போது விலாவென்புஅசைதல், (2) மஞ்சள் நாரிழையம்—மூட்டுகளை இணைத்தல், (3) வெண்ணார்க் கசியிழையம் — முள்ளந்தண்டென்புகளுக்கிடையே வளைவை ஏற்படுத்தி இழுபட உதவுகிறது.

(10) வன்கூட்டிழையங்களின் வகைகள் யாவை?

(1) கசியிழையம்
(2) என்பு.

(11) வன்கூட்டு இழையங்களுக்கும் மேலணி இழையங்களுக்குமிடையே காணப்படும் பிரதான கட்டமைப்பு வேறுபாடுகள் 2 தருக?

மேலணி

(1) தாயம் இல்லை.
(2) கலங்கள் நெருக்கமாக உண்டு.

வன்கூட்டு இழையம்

(1) தாயம் உண்டு.
(2) கலங்கள் நெருக்கமாக இல்லை.

(12) என்புக்கலங்கள் எவ்வாறு போசணையைப் பெறுகின்றன?

ஆவேசியன் கால்வாயினூடு செல்லும் சிறிய நாடியிலிருந்து பரவல்முறையால்,

(13) என்புககலங்கள் உண்டாக்கும் தாயத்தின் பிரதான அசேதனக்கூறு யாது?

கல்சியம் பொசுபேற்று (Calcium Phosphate)

(14) பளிங்குக்கசியிழையத்திற்கும் அடர்த்தியான என்பிற்கும் இடையேயுள்ள 3 பிரதான வேறுபாடுகளை கூறுக?

பளிங்குக்கசியிழையம்
(1) தாயம் - கொந்திரின் (Chondrin) (2) கலங்கள் - பரம்பிக் காணப்படும் (3) ஆவேசியன் கால்வாய்இல்லை

என்பு (1) கல்சியம்பொசுபேற்று. (2) ஓரையமுள்ள வட்டம் உண்டு. (3) என்பு மென்றட்டுகளாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

(7)

சபாபதி நாவலர் வாசிகசாலை மதிற்சுவரைத் தழுவிச் செல்லும் ஒழுங்கை மகிழடி வைரவர் கோயிலருகே வளைந்து நெளிகிறது. அதனருகே அந்தப் பெரிய புளியமரம். அதன் கீழே அவன், பாக்கியம் மற்றும் நாலைந்து பெண்பிள்ளைகளுடன் ஓடி வருகிறாள், அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறாள். சிங்கனும் சென்ற வாரம் வரை இவர்களோடும் வேறும் சில பையன்களோடும் இதேநேரம் ஓடிவந்தவன்தான் இப்போது—?

''சிங்கன் நீ ஏன் இப்ப பள்ளிக்கு வாறேல்லை'' பாக்கியம் ஓட்டத்தை நிறுத்திவிட்டு அவனருகில் வந்து கேட்டாள். சிங்கன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் கலங்கின.

''ஐயா செத்துப்போனரெல்லே.......... அதனாலை பள்ளிக்குப்போகவேணுமெண்டு அம்மா தடுத்துப்போட்டா ...'' விசும்பினான் அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன் சிங்கன். அவனைப் பார்த்துக்கொண்டிருந்த பாக்கியத்துக்கும் கண்கள் கலங்கின. முழங்கால் வரை தொங்கிய தனது பாவாடையைத் தூக்கி அவன் கண்களைத் துடைக்கிறாள் அவள். ''அழாதை சிங்கன், உங்கடை அம்மாட்டை நான் கேக்கட்டே''

''என்னண்டு''

''உன்னைப் பள்ளிக்கூடம் அனுப்பச் சொல்லி''

சிங்கன் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக எழுந்தான். அவன் நான்காம்வகுப்பில் ஒருவருடமும், ஐந்தாம் வகுப்பில் ஒருவருடமும் தங்கிவிட்டபின், இரண்டாம் தடவை ஐந்தாம் வகுப்பை ஆரம்பித்தபோது அவனை எட்டிப் பிடித்திருந்தாள் பாக்கியம். எப்படியோ அவர்கள் இருவருக்கும் இடையில் நல்ல நட்பு வளர்ந்தது.

ஒருநாள் ஐந்தாம் வகுப்பு சிவசம்பு வாத்தியார் அடிமட்டத்தின் கூரிய பக்கத்தால் சிங்கனை அடித்துவிட்டார். மத்தியானம் 'பணிஸ்' வாங்கப் போகாமல் அவன் அழுது கொண்டிருந்தபோதும் இப்படித்தான் பாக்கியம் அவனுக்காக அழுதாள். சிங்கனை அடிக்க சிவசம்பு வாத்தியார் பயன்படுத்திய அடிமட்டம் பாக்கியத்தினுடையது என்பதால் அவளுக்கு அதில் இரட்டிப்புக் கவலை. அதற்காக அடுத்த நாள் அவள் அடிமட்டம் கொண்டுவராமல் பள்ளிக்கூடம் வந்து— 'சிவசம்பு வாத்தியார்' வாங்குமேல் ஏறி நிற்கும்படி பணித்தபோது சிங்கன் கண்கலங்கினான்.

ஐந்தாம் வகுப்பில் அப்பா செத்துப்போனதும் சிங்கன் மாட்டுக்காரச் சிங்கனானான். அடுத்த வருடமே பாக்கியத்தின் தகப்பன் காலமாக பாக்கியமும் படிப்பை நிறுத்த நேர்ந்தது.

இதற்குப் பிறகு நீலப்படலை வீட்டு யன்னல் கம்பி காதல் கீதம் மீட்ட ஆரம்பித்து நீண்ட நாட்களாகி இப்போது சுருதிகலைந்தும்போய்விட்டது. சிங்கன் பெருமூச்சுடன் நிமிர்ந்தான். எப்படியாவது அவன் பாக்கியத்தைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.

நாலைந்து நாட்களாக நல்ல வெயில் கொளுத்தியது. சிங்கன் கடற்கரையோரம் மாடுகளை மேயவிட்டுக்கொண்டிருந்தான். நாளைமுதல் செம்பாட்டுக்கு மாடுகளைக் கொண்டு போகவேணுமென்றுஎண்ணிக் கொண்டான்

தூரத்தில் பெட்டிகளுடன் சில பெண்கள் வருவது தெரிந்தது. கோப்பாய்க் கிராய் சம்புப் புல்லுக்கு பிரசித்தி பெற்றது. உருண்டையாகத் தடித்து வளரும் இப்புல்லில் அதிக போசனைச் சத்துக்கள் இல்லாவிட்டாலும் கோப்பாய், நீர்வேலி பெண்களுக்கு மாலைநேர வேலைகளில் மாடு கன்றுகட்கு சம்பு அறுப்பதும் ஒரு பிரதானவேலை. அதுவும் இளம் பெண்கள் வயல்வெளியில் மென்மையான இளம்

## கோப்பாய் எஸ். சிவம்

தென்றலில் கதைத்து சிரித்து கைகள் இயந்திரமாக புல்வெட்டும் அழகே தனியானது.

சிங்கன் நன்கு அவதானித்தான். அவனுக்கு வியப்பு மேலிட்டது. பாக்கியமல்லவா வருகிறாள். அடுத்தவீட்டில் இருக்கும் — அவளிலும் பார்க்க நாலைந்து வயது குறைந்த இரு சிறுமிகளுடன் அவள் தான் வருகிறாள். அவள்உண்மையாக புல்லுவெட்டத்தான் போகிறாளா? அல்லது......—?

திகைப்போடு அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் சிங்கன். அவள் அவனருகில் சிறிது தயங்கினாள். மற்ற இருவரும் மெல்ல நகர்கிறார்கள்.

பாக்கியத்தின் உதடு துடிக்கின்றது. கண்கள் படபடக்கத் தலைகுனிந்தபடி—

''வீட்டில் கலியாண ஏற்பாடு நடக்குது, சோமையற்றை மோன் குமாருக்குப் பேசுகினம்........'' கண்கள் கலங்கித் துளிக்க ஒரு பெருமூச்சு வாக்கியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க விரைந்து நடக்கிறாள் அவள்.

திடுக்குற்றுப்போய் அவளையே பார்த்தபடி நிற்கிறான் சிங்கன். தள்ளாடியபடி நடந்துசெல்லும் அந்தப் பூங்கொடிக்கு நல்ல கொழுகொம்பு வேண்டும்.

இவளுக்கு மணமகன் குமாரா? வெறுப்பில் அவன் முகம் சுளித்தது. கூடவே சோமையர் தன்மீது கொண்ட வெறுப்புக்கு காரணம் புரிகிறது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாத தவிப்போடு நீலக்கடலை வெறித்து நோக்கினான் சிங்கன், பூநாகம் உடலைச் சுருக்கி நெளிந்தது..........

அதற்கு என்ன வழி?

ஞானக்கா சொல்லுகிற எத்தனையோ 'ஓடிப்போன' கதைகளை அவன் நினைத்துப் பார்த்தான். அப்படிப் பாக்கியத்தையும் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டால்..................

சோதியின் கொடுவாள் மீசை நினைவில் வந்தது.

ஆனால் சிங்கன் அதற்காகப் பயப்படவில்லை. யோசித்தான் அப்படி ஒரு அவப்பெயரைத் தான் தேடும்படியாக நடக்கக் கூடாது என எண்ணினான். அது கோழைத்தனமாகவும் அவனுக்குப்பட்டது. இந்த ஊரிலேயே அவன் அவளோடு வாழவேண்டும், இதே நாச்சிமார் கோயிலின் முன் இந்த மேடையில் அவளோடு தான் வந்து ஒன்றாக ஒருநாள் இருக்க வேண்டுமென்று நினைத்தான். அந்தப் புனிதமான ஆசை அவனுள் ஒரு சபதம்போல் ஒலித்தது.

சிலவாரங்கள் கடந்தன.

(தொடரும்)

## ஒரு கவிதை பாடுகிறேன்

ராஜபுதனத்து ரோஜாப் பூவே!
இனிய தமிழ்த்தாயின் செல்வப்புதல்விகளே!
இங்கே
மறந்தவனை மறக்காத மாதவி மகளொருத்தி
காதலை வெறுக்க கடுந்துறவு மேற்கொண்டாள்!
நீ
காதலை வேண்டியன்றே கடுந்துறவு மேற்கொண்டாய்
பொய்யில்லை பெண்ணே புரட்சித்துறவி நீ!
கடைசியில் தோழி—நீ—
கண்ணோடு கலந்துகாணாமற் போனாயாம்!
இல்லையடி மகளே
இங்கேதான் இருக்கின்றாய்!
கண்ணுக்குத் தெரியாத கண்ணீர் மீராக்கள்
எண்ணிக்கை சொன்னால் இதயம் கருகிவிடும்!
வரதட்சிணை நோயால் வாழாத மீராக்கள்
கண்ணன் ஒருவனைத்தேடி காத்திருக்கின்றார்கள்!
இதயத் தம்பூராவில்!
இவர்கள் மீட்டும் சோகச்சுருதியெல்லாம்
சமையலறைகளிலேயே சமாதிநிலை அடைகிறது!
இந்த
வனிதையர்க்கெல்லாம் நல்வாழ்வு—
கிடைக்க வாழ்த்தி!
நான் ஒரு கவிதை பாடுகிறேன்!

— காரை — எஸ். தங்கவடிவேல்.

# ஆண்களே, ஜாக்கிரதை!

# ஒரு கணவன் மனைவியாகிறான்!

## - குமார் தனபால் -

இப்போது இரண்டு நாட்களாக என் தசை நார்கள் என் உடலை விட்டு, விட்டு.....விலகி..... விலகி...... ஓடுவதைப் போன்ற பிரமை!—

குழம்பில் போட்ட நாறல் மீன் துண்டை உருவமாக எடுத்துவிட வேண்டுமென்ற பிரயத்தன அவதி! சே! இப்படி ஒரு பயந்தாங்கொள்ளி நிலைமை என்போன்ற திடமனமுள்ளவர்களுக்கே வந்துவிட்டதே!

உலகத்துப் பெண்களெல்லாம் ஒன்றுகூடி என்னை நோக்கிப் பாய்வதைப் போன்ற திகில்! மனைவிதான் அக்கூட்டத்தினருக்குத்தலைவி போன்று விஸ்வரூபமெடுத்து என் முன் படக் படக்கெனத் தோன்றிக் கொண்டிருந்தாள்!

தெருவில் நின்று போய்வரும் பெண்களை உற்று உற்றுப் பார்க்கிறேன். அவர்கள் என்னைத்திரும்பிப்பார்த்ததும்பயத்துடன் ஓடிவந்து வீட்டுக்குள் பதுங்கக்கொள்கிறேன்.

அதிகாலை ஆறு மணிக்கு வேலைக்குப் போனால் இரவு பத்து மணிக்குப்பின் வீடு திரும்பும் நான் இரண்டு நாட்களாக வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது மனைவிக்கு சந்தோஷம் தான். என்றாலும் தன்னுடன் கூட நாலு வார்த்தை பேசாமல் அப்படி இந்தாளுக்கு என்ன வந்து விட்டது?'' என்று அடிக்கடி விசனித்துக்கொள்கிறாள்.

ஊர்ப்பெண்களெல்லாம் ஒழுங்கை முழுதும் கூடிக் கூடி என்னைப்பற்றியே குசு குசுத்துக் கொள்கிறார்கள்.

நான் இப்படி ஊராரின் ஆச்சரியத்துக்குள்ளானது ..... வெறும் கதையல்ல. அது ஒரு கட்டுரை...... நேற்று ஒரு மாத சஞ்சிகையை பிரித்து நுனிப்புல் மேய்ந்தேன்...... ''ஆண்களே ஜாக்கிரதை'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன். அதன் சாராம்சம் இதுதான்.

''ஆண்களே ஜாக்கிரதை! ஏனென்றால் ஆண்களை விட இந்த உலகத்தில் பெண்கள் தான் பலசாலிகள் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டார்கள். சந்திரனுக்கு முதன் முதல் மனிதனை அனுப்ப எண்ணியபோது அதில் ஒரு பெண்ணைத்தான் அனுப்ப வேண்டும் என்று விஞ்ஞானிகள் ஒற்றைக் காலில் நின்றார்களாம். விண்வெளியில் ஏற்படும் திடீர் திடீர் அதிர்ச்சிகளை ஆண்களை விடப் பெண்கள் தான் மிகச் சுலபமாக தாங்கிக் கொள்வார்களாம்..... உலகில் மன முறிவில் தற்கொலை செய்துகொண்டவர்களில் பெண்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருக்கிறதாம்.

இதுபோன்று வாழ்க்கையில் விரக்தியுற்றுப் பயித்தியமானவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தபோதும் அங்கு ஆண்களே பெரும்பாலானவர்களாக இருக்கிறார்களாம். அதனால் 'ஆண்களே ஜாக்கிரதை' என்று மனைவிமார்களை எடுத்ததற்கெல்லாம் திட்டி அடிக்கும் கணவன்மார்களை மிகஎச்சரித்திருந்தார்கள்.

ஒரு பெண் நினைத்தால் எதையும் செய்துவிட முடியும்.

குடித்துவிட்டு குடும்பத் தலைவியுடன் அடிபிடி சண்டை போடும் கணவன் கோட்டான்களே! ஜாக்கிரதை! இவ்வளவு பலசாலியான பெண் உனக்குத் திருப்பி அடிபோட முற்பட்டால்...... உன் கதி.....? அதனால் ஆண்களே ஜாக்கிரதை!''

உண்மைதான் பக்கத்து வீட்டுப் பரமு எவ்வளவு நிறை தண்ணிக்காரன் குடித்துவிட்டுக் குரல் எழுப்பி குழறக் குழற மனைவிக்குப் போட்டுப்போட்டு அடிப்பானே...... அவள் இவ்வளவு காலமாக ஏதாவது இவனை எதிர்த்துப் பேசியிருப்பாளா? எதையும் தாங்கும் இதயம் பெண்களினது. இவனின் அடி உதை தாங்கமாட்டாது..... பொறுத்தது போதும் என அவள் துள்ளி எழுந்து இவனுக்கு ''கும்கும்'' குத்துகள் போட முற்பட்டால்...... இந்த ஒல்லிப்பரமு எந்த மூலைக்கு!

ஐயையோ...... நானும் என்னவளுக்குத் தேவையற்ற விஷயங்களுக்கெல்லாம் ஏசி அடித்திருப்பேனே......! எப்போதாவது மனைவி மூர்க்கம் கொண்டு என்னை எதிர்க்கத் தொடங்கினால்......!

ஏன் மனைவிதான் கணவனுக்கு அடங்கிப்போகவேண்டுமென்பது! சட்டமா என்ன? கணவன் மார்களும் மனைவிமார்களுக்கு அடங்கிப்போனால் என்ன குறைந்துவிடும்?

சில கணவன் மார்கள் மனைவியே, தஞ்சம் என்று அவர்கள் இட்டபடியே ஏவலை செய்து கொண்டு கணவன் பெயரில் மனைவிகளாக வாழவில்லையா?

இப்போதும் இந்த நிமிஷம் முதல் ஒரு கணவன் மனைவியானால் என்ன.....?

கோழிப் பண்ணையில் இலாபம் பெற
டயமிக்ஸ்
டயமிக்ஸ் – அமெரிக்காவில் டயமன்ட் ஷம்ரொக் ஸ்தாபனத்தினால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க இத் தீனி உயர்ரக விட்டமின்களும் தாதுப்பொருள்களும் கொண்டது. விலையோ சகாயம்.
முட்டைக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 20/90
குஞ்சுக் கோழி ஆரம்பத் தீன்,
இறைச்சிக் கோழித் தீன் 450 கிராம் பை ரூ. 21/90
25 கிலோ கிராம் பைகளிலும் கிடைக்கும்.
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்
மாஸ்டர் ஃபீட்ஸ் லிமிட்டெட்
30, ஃபிறேஸர் அவனியூ, தெஹிவளை. தொலைபேசி: 071-5123
இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கிடைக்கும்.
டயமிக்ஸ்–இலாபம் தரும் கோழிப்பண்ணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்

# கல்யாணப் பொருத்தங்கள்

ஆசிரியர் பொ. சங்கரப்பிள்ளை. கிடைக்குமிடம்: ஜெயலட்சுமி புத்தகசாலை, கொழும்பு—6.

சென்றவருடம் திருவாளர் சங்கரப்பிள்ளை 'நாம் தமிழர்' எனும் பண்டைத் தமிழர் வரலாறுச் சுருக்கம் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்நூலில் வழக்கமாக நாம் ஏற்றுக்கொள்ளும் கருத்துக்கள் சிலவற்றை மறுத்துத் தமது கருத்துக்களை விளக்கியிருக்கிறார்.

இவ்வருடம் ''கல்யாணப் பொருத்தங்கள்'' எனுஞ் சோதிடத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். பெரும்பாலான இந்துக்கள் பொருத்தம் பார்த்துக் கல்யாணஞ் செய்வது வழக்கமாகும். எமது நாட்டிற் பல பௌத்த மதமக்களும் பொருத்தம் பார்க்கின்றனர். இப்பொருத்தங்கள் பஞ்சாங்கங்களிற் கொடுக்கப்படுகின்றன.

ஆசிரியர் சோதிடத்தில் நம்பிக்கையுடையவர், எனினும் விளக்கமும் அனுபவச்சான்றுமின்றி எதையும் ஏற்றுக்கொள்ள மறுப்பவர் கல்யாணப் பொருத்தங்களில் எவ்வளவு உண்மை உண்டு, இவற்றுக்குச் சோதிட அடிப்படையோ விளக்கமோ உண்டா என்பனவற்றைக் காண எத்தனிக்கிறார் பஞ்சாங்கத்துக்குப் பஞ்சாங்கம், நூலுக்கு நூல் உள்ள முரண்பாடுகளை எடுத்துக் காட்டுகிறார். விதிவிலக்குகளை விரிவாகக்கூறுகிறார். இவ்விதிவிலக்குகள் பல பொருத்தங்களை அர்த்தமற்றவையாக்குகின்றன என்கிறார் பொருத்தங்களில்பல சோதிட அடிப்படையும் விளக்கமற்ற சோடனைகள் எனவும் பண்டிதர்களின் கணிதவிநோத விளையாட்டுகள் எனவும் மூடநம்பிக்கை எனவும் கூறுகிறார்.

உதாரணமாக மக்கள்பெரும்பாலும் அஞ்சும் இராசிப் பொருத்தம் எவ்வாறு சோடிக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறார்.

ஆசிரியரின் கருத்துக்கள் சுருக்கமாகப் பின்வருவனவாகும்.

1. நட்சத்திரங்களின் அடிப்படையிலான எமது பொருத்தங்கள் முக்கியமானவைகளல்ல. ஆயுளுக்கு இரண்டு சாதகங்களையும் தனிபார்க்க வேண்டும். இரண்டாவதாக 2ம், 7ம், 8ம் வீடுகளின் பலன்களையும் தனிப்பட்ட சாதகங்களில் மதிப்பிடவேண்டும். மூன்றுவதாக இப்பொருத்தங்களில் முக்கியமானவற்றைப் பார்க்கலாம்.

2. கூடியமட்டிற் கூறினும் இப்பொருத்தங்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இருக்கக்கூடிய மன இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஒத்திசைவையும் மட்டுமே காட்டலாம். மன இணக்கச் சுட்டிகளாகும். இப்பொருத்தங்கள் இருந்தால் ஆயுள் நீடிக்கும் எனவும், செல்வம் சேரும் எனவும். புத்திர பௌத்திர விருத்தி, கீர்த்தி. புகழ்.பதவி, சன்மார்க்கம் முதலியன உண்

(9-ம் பக்கம் பார்க்க)

# மாணவர்தேர்வுக்கட்டுரைகள்

ஆசிரியர் பா. சத்தியசிலன்

கட்டுரை எழுதுவது, அறிவோடு இணைந்த கலை. இந்தக் கலையினைக் கல்வி கற்கும் காலத்திலே மாணவர்கள் பட்டை தீட்டித்தீட்டி ஒளி பெறச்செய்ய முயற்சிக்கவேண்டும். ஏனெனில், கல்வியின் முழுமைக்கு அது பெரிய பங்கினை வழங்குகின்றது.

இந்த வகையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவத்தக்க ''மாணவர் தேர்வுக் கட்டுரைகள்'' என்னும் அரிய நூல், பண்டிதர் பா. சத்தியசீலன் பி.ஏ. (சிறப்பு) அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளது.

இந்நூலில், கட்டுரைகள் நல்ல வண்ணத் தமிழில் தீட்டப்பட்டுள்ளன! எடுத்த பொருளை, மாணவர் மனத்திரையில் சொல்லோவியமாக பதியவைக்கும் தமிழின் நடை, இந்நூலின் தலையாய சிறப்பு. ஆற்றொழுக்கான அந்த நடையினை மாணவர் படித்தால், அவர்கள் உள்ளத்தில் நல்ல 'தமிழ்நடை ஊறல்' பிறக்கும்!.

உயர்தர மாணவர்களது கடந்த காலப் பரீட்சை வினாக்களை ஆய்ந்து தேர்ந்தெடுத்துள்ள கட்டுரைத் தலைப்புக்களிலும், அவர்களின் பரீட்சைக்கு உகந்த வேறு வேறு தலைப்புக்களிலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

''பரிசு யாருக்கு?'' என்ற நாடகமும். ''கல்வி நல்லவர்களையா வல்லவர்களையா உருவாக்கவேண்டும்?'' என்ற வாதப்பிரதிவாத உரையாடலும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மொத்தமாகப் பதினொன்கு தலைப்புக்களில் இந்நூலில் விடயங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவை பொருளாதார, விஞ்ஞான அறிவை மாணவருக்குச் சுவையாகத் திரட்டித் தருகின்றன; தமிழைச் சுவைக்கச் செய்கின்றன; மாணவ உள்ளங்களில் கதை, நாடகம் ஆகிய கலைகள் பற்றிய கற்பனை உணர்வுகளைச் சிறகடித்துப் பறக்கச்செய்கின்றன. விவாத அரங்குகளில் எவ்வாறு விவாதிக்கவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகின்றன.

''மறக்கமுடியாத சம்பவம்'' என்ற கட்டுரை ரசமான ஒரு கதை போலச் சொல்லப்படுகிறது. ரயிலில் அர்த்தசாமத்தில் நித்திரையில் இருந்தவரைப் பாடலோ, சண்டையோ என்று கணிக்கமுடியாதவாறு சத்தம் விழிக்கச்செய்கிறது. பாட்டும், சண்டையும் ஒன்றாகவே கேட்கிறது. அப்போது ''சங்கீதத்தின் பின்னணியில் சண்டையா?'' என்று விழித்தவர் மனதிலே வினவுவதாக எழுதப்பட்டுள்ள வசனம் அருமையானது.

''நத்தார்ப் பண்டிகை'' யைப் பற்றி எழுத ஆரம்பிக்கும்போது, அப்பண்டிகையின் மாரிகாலச் சூழ்நிலையை ஆசிரியர் கொண்டுவருகிறார். ''பார்வை போர்வையைத் தேடுகிறது'' என்று உடலையும், உள்ளத்தையும் குளிரவைக்கிறார்.

இந்நூலில் மின்னும் அழகு வசனத்தின் ஒருபகுதி: ''கிழக்கின் ஒளி விடிவு! விளக்கின் ஒளி மங்களம்! ஒளியின் விழாவான தீபாவளியும் விடிவையும், மங்களத்தையும் தரவேண்டுமல்லவா!'': இப்படிப் பல பகுதிகளைக் காட்டலாம். (தீபாவளி, பக். 23).

இந்நூலின் இறுதிப் பகுதியில், மாணவர் கவனத்திற்கு என்று ஆசிரியர் எழுதியுள்ள குறிப்புக்கள் மாணவர் கவனத்திலே மிகவும் பதிக்கவேண்டியவை.

அதில் கட்டுரை எவ்வாறு எழுதப்படவேண்டும் என்ற குறிப்புக்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் ஆசிரியர் விளக்கியுள்ளார். அக்குறிப்புக்களுக்குத் தான் அந்நூலில் எழுதிய பகுதிகளை மேற்கோளாகக் காட்டி விளக்கியுள்ளார்.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்த அருந்தமிழ் நூல் அருந்துணை என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலின் பதிப்பாளர், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். நூலின் விலை ரூ. 9/-.

— எழில்வண்ணன்

# சிங்கள மக்களிடம் நிலவும் சில தமிழ் மரபுகள்!

''சிங்களவரும் தமிழர்களும் சரித்திர காலந்தொட்டே சரித்திர ரீதியிலேயே பிணைக்கப்பட்டு ஒரே வகையான தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் இலக்காகி வந்துள்ளனர். சிறு விஷயங்களினுல் இவர்களது பிணைப்பைப்பிளந்து விடுவது எளிதான காரியமன்று. பூசல்கள் இடையிடை தோன்றக்கூடும். தோன்றுவது இயல்பே. இவை குடும்பச் சச்சரவுகள் போலாகும். ஆனல் இரு சமுதாயத்தினரையும் பொதுவான பாரதூரமான இக்கட்டுகள் வந்தெதிர்த்த காலை சிறு தகராறுகள் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டுத் தோளோடு தோள் நின்று போராடியமையே சரித்திரங் கண்ட உண்மை. வேறுபட்ட சாதியினர் வாழும் நாடொன்றில் சாதிமத பேதங்களைப் புகுத்துவது ஆபத்து. நம் நாட்டு மக்கள் உன்னத நாகரிகமடைந்தவர்கள் என்ற பெருமையில் நாம் என்றும் பெருமிதம் அடைந்து வந்துள்ளோம். இதனை நாம் என்றுமே மறந்து விட முடியாது''

— அ. இராசதுரை —

இலங்கையில் ஆரியர் வருமுன்பே மக்கள் வாழ்ந்து வந்தனரென்பது மறுக்க முடியாத உண்மை. அவர்கள், எச்சாதியர்களென்பதைத் திட்ட வட்டமாகக் கூற முடியாவிடினும், இந்து மதத்தைச் சார்ந்தவர்களென்பதும் மறுக்க முடியாதது. விஜயனும் அவனது சகாக்களும் இந்து மதத்தினரென்பதும் மறுக்க முடியாத உண்மையே. ஆகவே இந்து மதத்தின் செல்வாக்கு இத்தீவில் எங்கெங்கு மக்கள் வாழ்ந்தனரோ அங்கெல்லாம் பரவியிருந்ததென்பது கண்கூடு.

மேலும் சரித்திர காலத்திற்கு முன்னிருந்தே இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கு மிடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளது. இந் நெருங்கிய தொடர்பால் தமிழர்களின் செல்வாக்கு சிங்களவரிடையே பரவியது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

சிங்கள மக்கள் பௌத்த மதத்தைத் தழுவியவுடனேயே அவர்கள் வழிவழியாகநாளும் பொழுதும் கையாண்டு வந்த பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் ஓரிரவிலேயே கைவிட்டிருப்பார்கள் என்பது இயற்கையின் நியதிக்கு ஒவ்வாததொன்றாகும். அவர்கள் அவற்றைக் காலப்போக்கிலேயே கைவிட முற்பட்டிருப்பர். ஆனல் அதற்கிடையில் இலங்கை மேல் தென்னிந்தியத் தமிழர்களுடைய படையெடுப்புக்கள் அடிக்கடி நிகழ்ந்து வந்ததால் அவற்றின் தாக்கம் சிங்களவர் தமிழர்களுடைய தொடர்பை துண்டிப்பதற்கு முட்டுக்கட்டையாக அமைந்தது. இந் நிலைமை 11ம் நூற்றுண்டுவரை நீடித்தது. இதற்கிடையில் இந்து சமயம் இலங்கையில் ஆழமாகவே வேரூன்றி விட்டது. இந்நிலையில் அதன் தாக்கத்தைப் புறக்கணிக்கவோ தள்ளிவிடவோ சிங்கள மக்களால் இயலவில்லை.

மகா பராக்கிரமபாகு மன்னன் முதல் கோட்டை மன்னர்கள் வரை இந்து சமயத்தை மிகவும் ஆதரித்து மந்தனர். ஆகவேதான் முதலாம் இராஜ... [illegible] ... இந்து மதத்தைத் தழுவினது மல்லாமல் தனது ஆதிக்கத்துக்குள் இருந்த பிரசைகள் யாவரையும் இந்து மதத்தைச் சேருமாறு வற்புறுத்தினன். அவ்வண்ணஞ் சேர்ந்த பௌத்தர்களையும் மிகவும் துன்புறுத்தினன். அரசன் இந்து மதத்தில் உடனடியாகச் சேருவதற்கேற்ப இந்து மத சம்பிரதாயங்கள் சிங்களப் பிரதேசத்தில் இருந்திருக்க வேண்டும். மேலும் இக்காலத்தில் கோட்டை மன்னர்களிடை கிறீஸ்தவ சமயமே மிகச் செல்வாக்குப் பெற்றிருந்ததென்பதையும் ஈண்டு குறிப்பிடவேண்டும்.

அண்மைக் காலத்தில் கண்டி இராச்சியத்தைப் பலவாண்டு காலமாகத் தமிழ் மன்னர்களே ஆண்டு வந்தனர். அவர்கள் இந்துக்கள். இவர்கள் அரச பதவிக்கு வந்ததும் பௌத்த மதத்தை வெளிப்படையாகத் தழுவி ஆதரித்து வந்தனராயினும் மறைமுகமாக இந்து மதத்தையே பேணி வந்தனரென்பது யாவரும் அறிந்தது. ஆகவே சரித்திரத்துக்கு அப்பாற்பட்ட காலந்தொட்டே தமிழர்களின் செல்வாக்கு ஏதோ விதத்தில் இன்றுவரை இலங்கைவாழ் மக்களிடை இருந்து வந்ததென்பதை நாம் அறியக் கூடியதாகவிருக்கிறது. இச்சந்தர்ப்ப சூழ் நிலைகளிடையேயே சரித்திர காலத்தில் தோன்றிய சிங்கள சமுதாயம் தன்னையுமறியாமல் உருவாகித் தமிழர்களின் பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் மேற்கொள்ள வேண்டியவோர் நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்பதையே இக்கட்டுரை காட்டுகிறது.

## சாதிப்பாகுபாடு

சாதிப்பாகுபாடு, கட்டுப்பாடு பௌத்த மதத்துக்கு முற்றிலும் மாறுபாடானவோர் கோட்பாடு. இதை அதாவது வட இந்திய ஆரியர்களிடை நிலவி வந்த சாதிப்பாகுபாட்டையல்ல,தென்னிந்தியத் திராவிடர்களிடை நிலவி வந்த சாதிப்பாகுபாட்டையே சிங்கள மக்கள் இப்போதும் மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்து வருகின்றனரென்பது இதற்கோர் முக்கியசான்றாகும். சுருங்கச் சொல்லுமிடத்து சிங்களச் சமுதாய சம்பிரதாயங்களனைத்தும் சாதிபேத அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன என்பது கவனிக்கற்பாலது. இதற்குச் சான்றாக இப்போதும் சிங்களவர்களிடையில் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தினருக்குப் பல அடிப்படை உரிமைகள் கிட்டாமலிருப்பதற்குச் சாதிப்பாகுபாடே மூலகாரணமாகும்.

சிங்கள மக்களிடம் நாளாந்த வாழ்க்கையில் பிரயோகிக்கப்படும் உணவு, உடை, உரித்து முறை, தொழில்' அவை, இசை, நடனம், ஒவியம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பொருள்களைக் குறிக்கும் சொற்களில் தொனிக்கும் தமிழ்ச் சொற்களின் சாயல் (சிங்கள இசைக்கும், நடனத்திற்கும் இன்றியமையாத தோற்கருவிகளான பேரிகையும். உடுக்கும் தனித் தமிழ்ச் சொற்களே), கண்டிப் பிரதேசத்தில் இன்றும் பெண்கள் ஆடை அணியும் பாணியும், அவர்கள் தம்மை அலங்கரிக்க அணியும் கொலுசு, பதக்கம், அட்டிகை, ஒட்டியாணம். தோடு போன்ற ஆபரணங்களும் தமிழர்களினதென்பதை மறுக்க முடியாது.

தமிழர்களின் செல்வாக்கு, சிங்களவரிடம் சமூக ரீதியில் மாத்திரமன்றி அவர்களது மதச் சடங்குகளிலும் ஊடுருவியிருக்கிறது. சிங்கள மக்கள். பௌத்த மதத்துக்கு முரணுன பல இந்துமதக் கிரிகைகளை மேற்கொண்டு சிற்சில மாற்றங்களுடன் அவற்றை ஒளிவு மறைவின்றியே பேணிவருகின்றனர்.

சிங்களவரிடம் வழங்கும் தோயில் அல்லது தோவில் 'யி'யும். 'வி'யும் கோயில் அல்லது கோவில் எனும் தமிழ்ச் சொற்களில் வித்தியாசமின்றி வருவதைக் கவனிக்கவும்( சூனியம், தெய்வக் கப்புவன், தியக் கப்புவன், பேயோட்டம், மாந்திரீகம் இவை யாவையும் பௌத்த சகாப்தத்துக்கு முற்பட்டனவாகவும், இந்துமத அடிப்படையில் அமைந்துள்ளனவாகவும் இருக்கின்றன. வீட்டிலும், வயலிலும், பொது வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் கடைப்பிடிக்கப்படும் மதச் சம்பிரதாயங்கள், அன்றாட வாழ்க்கையோடு தொடர்புள்ள பிறப்பு, இறப்பு, ருது, திருமணம், பல்வகைத் தொழில்களோடு தொடர்புள்ள பழக்கவழக்கங்கள். ஏர்பூட்டு, விதைப்பு, அறுவடைக் காலங்களில் நடைபெறும் கொண்டாட்டங்கள் இவை யாவும் இந்து சமயத்தோடு சம்பந்தப்பட்டவைகளாகவே இருக்கின்றன.

## தெய்வங்கள்

கிராமங்களில் உள்ள கபுறளை, கட்டாடி, யக்கதுரர், பத்தினிஹாமி; பழைய காலத்தில் கோட்டை இராச்சியத்தில் இருந்த நாத, சாமன், விஷ்ணு, பத்தினி ஆலயங்களும்; தற்காலத்தில் கண்டி நகரிலுள்ள மேற்கூறிய தெய்வங்களின் ஆலயங்களும் பௌத்த மதத்திலிருந்து தோன்றவில்லை. இலங்கைத்

(9-ம் பக்கம் பார்க்க)

# கோலமயிலே!

கோலமயிலே இக்கொள்ளையெழில் ஏதடி—நீயும்
கொவ்வையிதழ் மலர்த்தி மெல்லநகைப்பது மேனடி
நீலப்பட்டுடுத்தி எதிர்வந்துநிற்பதுமேனடி—என்
நெஞ்சையள்ளும் மாயமோ இது சொல்லடி
நாளும்கண்டு பாடும் கவிஞன் நானடி
நங்கையுனைக் கண்டு என்னை மறந்தேனடி
பாலுடன் தேனுய் ஊறுதடி பாடல் பெருகுதடி
பாவையுனைக் கண்டதும் எந்தன் நெஞ்சினிலே!

வானப்பெருவீதியிலே நீதேடுவது யாரையடி
வடிவழகி உன்விழிகளிலே ஏக்கம் ஏனடியோ?
மோனமொழி பேசியே நீயும்—என்னை
மோகனமாய் அழைப்பதென்ன விந்தையடி
மானின்விழி நாண மஞ்சள் முகம் சிவக்க—நானும்
மங்கையுனை அணைத்து காதல்பொழிந்திடவோ
தேனின்சுவை வென்ற செவ்விதழின்சுவை காண
தேவி உந்தன் மடிவந்திடவோ சொல்லுகிறாய்!

—ராணி மகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தாயே உனக்காக

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கா-ஜெய்சித்திரா
அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர்
நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

# சிங்கள மக்களிடம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவின் குலதெய்வம் விஷ்ணு. சமந்தகூடம் அல்லது சிவனொளிபாதமலையின் காவற் தெய்வம் சாமன். எல்லாளனை யும், துட்டகைமுனுவையும் போஷித்துவந்த தெய்வம், கதிர்காமத் தெய்வம் என்று கூறப்படுகிறது. பழையதும் புதியதுமான பல தெய்வங்கள் நாடெங்கிலும் பரவிக்கிடக் கின்றன. புகழ்பெற்ற கதிர் காமம். தெவுந்தரை, அலுத் நுவரை, சபிரகாமுவ ஆகிய இடங்களிலுள்ள தேவாலயங் களை வணங்கிவருபவர்கள் பெரும்பாலும் சிங்களவர்களே யாகும்.

இனி நாம் தேசிய விளை யாட்டுக்களான அங்கெலி, போர்ப் பொல (போர்த் தேங்காய்), கெஹிமா என்ப வற்றையே எடுத்துக்கொள் வோம். பண்டைய காலத்தில் அங்கெலி மிகப்பிரசித்தமடைந் திருந்தது. அது அத்துணைப் பிரசித்தமடைந்திருந்த் கார ணத்தால் அது நம் நாட்டின் இடப் பெயர்கள் பலவற்றில் அமைந்துவிட்டது. ஆகிலும் இவை யாவும் இந்துக்களின் விளையாட்டேயாகும். சிங்கள விழாக்களையே எடுத்துக்கொள் வோம். கண்டியில் நான்கு பெருவிழாக்கள் நடைபெறு கின்றன. அக்காலங்களில் பெருந்திரளான மக்கள் அங்கு கூடுகிறார்கள். இவை தீவின் வேறு பகுதிகளிலும் தேசிய விழாக்களாகக் கொண்டாடப் படுகின்றன. மகா பெரஹறா அரசியல் நோக்கமுடைய தெனக் கூறப்படுகிறது. இது கஜபாகு மன்னன் இந்தியப் போரில் பெற்ற வெற்றியைக் குறிக்கும் சின்னமெனச் சொல்லப்படுகிறது. இவை யாவுமே சிங்களவர்களின் தேசி யக் கொண்டாட்டங்களாகும். ஆகினும் இவை இந்துமத விழாக்களே. அவுதுறு மங்கலி. எசல பெரஹறா, கார்த்திய மங்கலி, அலுற்சல மங்கலியும் இவற்றோடு சம்பந்தப்பட்ட கொண்டாட்டங்களும் இந்து மத விழாக்களி லென்றும் தோன்றியவைகளே. எனினும் இவை சிங்களவரால் சிங்களப்பட்டணங்களில் பிர தானமாகக் கண்டியில் இப் போதும் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

## தெய்வச் சின்னங்கள்

இந்நிலை ஏற்படக் காரணம் என்ன? சமூக அரசியல் விஷ யங்களில் முக்கியமானவற்றிற் குச் சிங்கள மக்கள் இந்துமதத் தெய்வங்களை எதற்காக நாடு கிறார்கள்? உபசம்பதமரச் சடங்கை இலங்கையில் மறுசீர மைக்கும் பொருட்டு இலங் கைக்கு வந்த சீயதேசக் குரு மார்களுக்கும் இக்கேள்வியே தோன்றியது. பௌத்த நாடொன்றில் இந்துச்மயம் முக்கிய இடம் வகிப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்ததில் வியப்பில்லை. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் சம யோசிதமாக ஒரு யுக்தியைக் கையாண்டு அவர்களைச் சமா தானப் படுத்தினன். அவன் பத்தினியின் சிலம்பு, மற்றைய இந்துத்தெய்வங்களின் சின்னங் களுடன் புத்தரின் புனித பல் லையும் திருவுலாவில் கொண்டு செல்லுமாறு ஏற்பாடு செய் தான். இவ்வழக்கம் இப்போ தும் கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது.

இப்படிப் புகுத்தப்பட்ட இந்துமதப் பழக்கவழக்கங்களை யிட்டுப் பௌத்த சமயத்தைக் குறைகூறுவது என அர்த்த மாகாது ஏனெனில்பௌத்த கோட்பாடு இவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. பௌத்தசங் கமும் இவற்றுடன் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள வில்லை. இவை சிங்களப் பொதுமக்களால் அனுட்டிக் கப்படும் தேசிய விழாக்கள் மாத்திரமே யெனக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த முரண்பாடான கொள்கைக்கு மூலகாரணம் பௌத்தம் ஒரு ஞானநெறியே யல்லாது ஒரு மதமல்ல வென்பதேயாகும். பௌத்தத்தில் உத்தியோகபூர் வமான கட்டுப்பாடுகளோ, ஒழுங்குபடுத்தப்பட்ட தொழுகை முறையோ. பிக்கு கள் குருமார்களோ பூசாரி

(2-ம் பக்கம்பார்க்க)

# கல்யாணப்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டாகுமெனவும் எண்ணுவது பேதமை.

3. இப்பொருத்தங்களிற் பல அர்த்தமற்ற சோடனை கள், இவற்றைப் பார்க்க வேண்டியதில்லை. உதாரண மாக நட்சத்திரம், கணம், மகேந்திரம், ஸ்திரீ தீர்க்கம், வசியம் இரச்சுவேதை, நாடி, விருட்சம், ஆயுள் பகை யோனியைத் தவிர்த்தாற் போதும்.

4. இராசிப்பொருத்தமும் இரவி பரப்பொருத்தமுமே சோதிட விளக்கமுடையவை. முக்கியமானவை, பார்க்க வேண்டியவை, பஞ்சாங்கத் திற் கொடுக்கப்படும் பொருத் தமான இராசிகள் தவறா னவை. உத்தமம் 1, 5, 9, 3, 11 மத்திமம். 4, 7, 10 பொருந்தாது. 6, 8, 12. 2 இராசி யதிபரப்பொருத்தத் துக்கு பராசரின் கிரக மித்துரு சத்துரு அட்டவணையைப் பின் பற்றவேண்டும்.

5 இலக்கினத்துக்கும் இவ் விரண்டு பொருத்தங்களும் பார்க்கவேண்டும்.

6, கிரகதோஷம் சோதி— விளக்கமுடையது. ஆனல் எமது பஞ்சாங்க விதிகளும் அட்டவணைகளும் தவறானவை. செவ்வாய் தோஷத்தை மிகை ப்படுத்திக் கூறுகிறார்கள்.

7. 27 பொருத்தங்கள் பத் தாகிவிட்டன. இலக்கினத் துக்கும், சந்திர இலக்கினத் துக்கும் இராசி இராசியதிபர் பொருத்தங்கள் பார்த்தாற் போதும்.

8. மேலும் பொருத்தங் காண விரும்பினல், கிரகநிலைப் பொருத்தம் பாருங்கள்.

இந்நூல் இனிய தமிழ்நடை யில் எழுதப்பட்டிருக்கிறது. அடிப்படைச் சோதிடஅறிவும் ஆராய்ச்சித்திறனும் இதன் சிறப்பம்சங்களாகும். நூலா சிரியர் பலசோதிட நூல்களை அலசி ஆராய்ந்து ஆராய்ச்சி முறையாக எழுதியுள்ளார். பல சோதிடர் முக்கியமான பொருத்தங்களைப் பாராது சில பஞ்சாங்கங்களிலுள்ள நட் சத்திர பொருத்தங்களைப் பார் த்து அதுவும் பிழையான முறையிற் பார்த்துப் பொருத் தமானவற்றைப் பொருத்த மில்லையெனவும் பொருத்த மில்லாதவற்றைப் பொருத்த மானது எனவும். கூறுகிறார் கள். சோதிட வல்லுநரும் பொதுமக்களும் இந்தநூலை வாசித்துப் பயனடைவார் களென நம்புகிறேன்.

கலாநிதி எச். டபிள்யூ
தம்பையா கியூ. ஸி.

யாழ். மனோஹரா வெண் திரையில்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி
வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

மக்கள் கலைஞர்
ஜெய்சங்கர்
சீமா
புன்னகை அரசி
கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி
பத்மினி
வி. கே. ராமசாமி,
மனோரமா,
விதுபாலா,
ரீனா
அமெரிக்க நடிகர்கள்
ஜோ ஆலபரட்
மார்ஷல்
மற்றும் பலர்
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத
முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட
வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப்படங்களை மிஞ்சும் வகையில் அமைந்த
விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப்படத்திலும்
காணக்கிடைக்காத பயங்கர சண்டைகள், மோட்டார் சைக்கிள்,
கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy-color

நாகம்ஸ் (சுன்னகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
சிவாஜி-கே ஆர். விஜயா
கிரகப் பிரவேசம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

சாந்தி
இன்று 115--வது தினம்!
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீயா?
இன்றுமட்டும்
17 - 19-11-80 மூன்று முடிச்சு

கடைசி வாரம்
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வனைஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்

**கதிர் ஹாட்வெயர்ஸ்**
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130

# மே. ஜெர்மனியில் பாப்பரசர்!

கொலோன், நவ. 15 பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஐந்து நாள் விஜயமொன்றினை மேற்கொண்டு மேற்கு ஜெர்மன் வந்துசேர்ந்தார்.

200 வருடங்களுக்குப் பின்னர் பாப்பரசர் ஒருவர் ஜெர்மனிக்கு விஜயஞ்செய்திருப்பது இதுவே முதல்தடவையாகும். கொலோன் விமானநிலையத்தை வந்தடைந்த பாப்பரசருக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

**மலிவு விற்பனை**

ரூபா 12/- பெறுமதியான துல்டெக்ஸ் பப்ளின் ரூபா 9/50 மட்டும். சொப்பிங் பேக் 3, 1/- மட்டும், காற்சட்டைத் துணி ரூபா 10/- மட்டும். சிலோபெக் பொலித்தீன் - முயல் நூல் - சிங்கம் இலாஸ்டிக் - கட்பீஸ்.
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.

**சீக்கோ டிரேடர்ஸ்**
(உட்புறம்)
43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

## திருமலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறச்செய்யவும், மற்றும் அவரது உரைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை நினைவுகூரும் வகையில் பல ஆக்கப்பணிகள் செய்யவும் நகரசபை தீர்மானித்திருப்பதாக நகராட்சிமன்ற உப தலைவர் அடிகளாரின் நினைவுச்சொற்பொழிவில் தெரிவித்தார்.

## நன்றி நவிலல்

**அமரர் டாக்டர் க. கனகரத்தினம்** அவர்களின் மரணச்சடங்குகளில் அன்பினால் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும், மலர்வளையம் முதலியவற்றைக் காணிக்கையாக அளித்த அன்பர்களுக்கும், தந்தி-தபால்கள் மூலம் அநுதாபச் செய்திகளை அனுப்பிய அன்பர்களுக்கும் ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தாருக்கும் எங்கள் இதயபூர்வமான ஆழ்ந்த நன்றியை பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

தனித்தனியாக எங்கள் நன்றியை சமர்ப்பிக்க முடியாமைக்கு வருந்தி மன்னிப்புக் கோருகின்றோம்.

இங்ஙனம்
பாரியாரும்-பிள்ளைகளும்
உறவினரும்

இல. 1 மணல்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

7338

## "தொழில் இழப்போர் நிவாரணம் பெறுவதற்கு நல்ல வாய்ப்பு"

### தொழில்நீதிமன்றத் திறப்புவிழாவில் உரை

(மட்டுவில்)

"வடபிரதேசத்திற்கு நிரந்தரமான ஒரு தொழில் நீதிமன்றம் திறந்து வைக்கப்படுவதின் மூலம் இப்பிரதேசத்தில் தொழில் இழந்தவர்கள் நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது" என்று சாவகச்சேரியில் தொழில் நீதிமன்றத்தைத் திறந்து வைத்து உரைநிகழ்த்திய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனுப். எம். எம். ஜமீல் கூறினார்.

சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றம், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வளவுக்குள் உள்ள விசேட நீதிமன்றக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, முன்னைய, ஆரம்ப நீதிமன்றக் கட்டடத்தில், புதிய தொழில் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தொழில் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ்.என். குருசாமி உயர் நீதிமன்ற நீதிபதியை வரவேற்றார். மேல் நீதிமன்ற நீதிபதி தொழில் நீதிமன்றத்தினுள் பிரவேசித்து, பதிவேட்டில் பதிவு செய்தார்.

ஜனுப் ஜமீல் தொடர்ந்து தனது உரையில் குறிப்பிட்டதாவது:-

"இத் தொழில் நீதிமன்றம், தொழிலாளர்களுக்கும், தொழில் கொள்வோருக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளை, கூடியவரையில் பரிசீலனை செய்து நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கின்றது. இந்த நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவனியா ஆகியபிரதேசங்களில் உள்ள தொழிலாளர் தமது தொழில் தகராறுகளை தீர்த்துக்கொள்ள வசதியளிக்கிறது.

இந்தத் தொழில் நீதிமன்ற நீதவான் திரு. எஸ். என். குருசாமி பலகாலம் இலங்கையின் பலபாகங்களிலும் சடமைபுரிந்துள்ளவர் மிகுந்த அனுபவஸ்தர். இவர் தொழில் ரீதியில் ஏற்படும் தகராறுகளை அணுகி ஆராய்வதில் திறமைசாலி என்றும் கூறினார்.

## தமிழ்க் காங்கிரஸ்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் புதிய தலைவராக சட்டத்தரணி திரு. எஸ். ஆர். கனகநாயகமும், பொதுச்செயலாளராக திரு. குமார் பொன்னம்பலமும், தனாதிகாரியாக திரு. ஜிம்மி ராஜரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய செயற்குழு, பொதுச்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கொ-ம)

இப்பொழுது கிடைக்கிறது. **NOW ON SALE** சமையலின் செலவினங்களை குறைக்க

# டிம்கோ TIMCO

## அடுப்புகளும், மரக்கரியும் பாவியுங்கள்.

வீட்டு சமையலின் எரிபொருள் செலவினங்களைக் குறைப்பதற்கு, அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் புதிய முயற்சி. மூன்று கிலோகிராம் (6½ ருத்தல்) அளவுகொண்டு அழகிய பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட "டிம்கோ" மரக்கரியும், களிமண்ணினால் தயாரிக்கப்பட்ட அடுப்பும் விற்பனை செய்யப்படுகின்றன.




**மரக்கரி உபயோகத்தின் பலாபலன்கள்..**

- விறகில் கிடைக்கும் உஷ்ணத்தில் இருமடங்கு உஷ்ணம் மரக்கரியில் கிடைக்கிறது.
- விறகைவிட நான்கு மடங்கு எரிதிறன் மரக்கரி கொண்டது.
- மரக்கரியை உபயோகிப்பதில் சுலபம்.
- மண்எண்ணெய் பாவிப்பிலும் குறைந்தளவு செலவு மரக்கரி பாவிப்பதால் ஏற்படும்.
- மரக்கரி பாவிப்பதனால், மண்ணெண்ணெயைப் போலன்றி உள்ளூர் எரிபொருள் சக்தியை பயன்படுத்தும் வசதி.
- விறகைப்போலன்றி, மரக்கரி விரைவாக எரியும் திறன் கொண்டதல்ல.
- மரக்கரி பாவிப்பதால் புகையோ, கரியோ பிடிக்காது. இதனால் வீட்டில் கரிபடிய மாட்டாது. பாத்திரங்களிலும் கரிப்பிடிக்காது.
- மரக்கரி பாவிப்பதனால், புகையினாலும், கரியினாலும் ஏற்படும் நோய்கள் தவிர்க்கப்படும்.
- மரக்கரி பாவிப்பதனால் சமையலறை சுத்தமானதாகவும், அழகாகவும் இருக்கும்.
- மரக்கரி பாவிப்பதனால், பெண்களுக்கு விடுதலை கிடைக்கிறது.
- மரக்கரி பாவிப்பதனால் காட்டுவளங்களை பாதுகாக்க முடியும்.

"டிம்கோ" அடுப்புக்களும் மரக்கரி பாவனையும் பற்றிய இலவச செயல்முறை விளக்கம் இன்று 16-ந் திகதி ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலையில் நடைபெறும். அனைவரும் வருகை தந்து பயன் பெறவும். விற்பனை 17-ந் திகதிமுதல் ஆரம்பமாகும்.

ஏக விநியோகஸ்தர்கள் :

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (லிமிட்)**
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் : 438

# அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 The Eelanaadu P. B. No 49. Telegrams Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org